விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 06 வியாழக்கிழமை (19.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 090

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# விடுதலைப் புலிகளுடனான யுத்தம் 3 வாரத்தில் நிறைவடையுமாம்!

## பாதுகாப்பு தரப்பு நம்பிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் இன்னமும் 3 வாரங்களுக்குள் பூர்த்தியடைந்துவிடும் என பாதுகாப்பு வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன. சிறிய நிலப்பரப்புக்குள் உள்ள விடுதலைப் புலிகளை தாம் அழித்து விடுவோம் எனவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாயவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள மாலைதீவின் பாதுகாப்பு அமைச்சர் அமீன் பைசல்; பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா மற்றும் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்

பாதுகாப்புச் செயலாளருடனான சந்திப்பு பாதுகாப்பு அமைச்சிலும் இராணுவத் தளபதியுடனான சந்திப்பு இராணுவத் தலைமையகத்திலும் கடற்படைத் தளபதியுடனான சந்திப்பு கடற்படைத் தலைமையகத்திலும் நடைபெற்றது.

இலங்கை- மாலைதீவின் உறவு தொடர்பாக பாதுகாப்புச் செயலாளருடனான சந்திப்பின் போது (12ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றச் செய்திகளை அனுமதியின்றி வெளியிடத் தடை

(கொழும்பு)

நாடாளுமன்ற செய்திகளை அனுமதியின்றி ஒளி, ஒலிபரப்புச் செய்யும் ஊடகங்களின் அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்ய நேரிடும் என சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபையில் உரையாற்றும் போது, அவருக்கு முன்னால் உள்ளஒலிவாங்கி இயங்காத நிலையில் அவரின் (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளன் பகுதியிலிருந்து 30இற்கும் மேற்பட்ட படகுகளில் 600 பொதுமக்கள் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

புதுமாத்தளன் பகுதியிலிருந்து சுமார் 30இற்கும் மேற்பட்ட படகுகளில் 600இற்கும் அதிகமான மக்கள் நேற்று பருத்தித்துறைமுனைப் பகுதியை வந்தடைந்தனர். நேற்றுக் காலை 6 மணி முதல் 10 மணி வரையுமாக இவர்கள் கரையை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு வந்தவர்களில் இளைஞர்கள், யுவதிகள், குழந்தைகள் அடங்குவதாக கடற்படை தெரிவித்துள்ளது. அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## முதல்வரை வவுனியாவுக்கு அழைக்கும் அரசு எதிர்க்கட்சியினரை அனுமதிப்பதில்லை

### ஏன் என கேள்வி எழுப்புகிறார் மனோ எம்.பி.

(கொழும்பு)

அரசாங்கம், தமிழ் மக்களின் மனதை வெற்றி கொள்ளத் தவறிவிட்டது. அதனால் தான், வன்னியில் உள்ள மக்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரத் தயங்குகின்றனர்.

தமிழக முதலமைச்சர் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு வவுனியாவுக்குச் செல்ல அழைப்பு விடுக்கும் அரசாங்கம் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை ஏன் மதவாச்சிக்கு அப்பால் அனுமதிப்பதில்லை என்று மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. கேள்வி எழுப்பினார். வெறுமனே ஐ.நா.மனித உரிமை ஆணையாளரை விமர்சித்துக் கொண்டிருக்காமல் அது தொடர்பாக ஐ.நாவின் பிரதிநிதிகளை அழைத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## அரிசியின் விலை 5 ரூபாயால் குறைப்பு

(கொழும்பு)

நாட்டில் 65 ரூபாயாக இருந்த பச்சை யரிசி மற்றும் நாட்டரிசியின் அதிகபட்ச சில்லறை விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 60 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக வர்த்தக மற்றும் நுகர்வோர் (12ஆம் பக்கம் பார்க்க)

## வான், எறிகணைத் தாக்குதல்களில் செவ்வாயன்று 78பேர் உயிரிழப்பு

### மேலும் 188 பேர் காயம்

(வவுனியா)

வன்னியில் உள்ள மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட எறிகணை மற்றும் வான் குண்டுத் தாக்குதல்களில் 78 பேர் உயிரிழந்துள்ளதுடன் 188 பேர் காயமடைந்துள்ளனர்.

மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் மற்றும் பச்சைப்புல்மோட்டைப் பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்களை நோக்கி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம் படையினர் ஆட்லெறி எறிகணை, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித்தாக்குதல்களை நடத்தினர் என பிரதேச தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகின.

இதேவேளையில் (12ஆம் பக்கம் பார்க்க)

## அவசியமற்ற பதவி நியமனங்கள் உடன் நிறுத்துமாறு அரசு உத்தரவு

நிதி நெருக்கடி காரணமாக அவசியமற்ற வகையில் புதிய நியமனங்கள் வழங்குவதை உடன் நிறுத்த வேண்டும் என அரசாங்கம் மாகாணசபைகளுக்கு உத்தரவிட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தகவல் ஊடகத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளதாலும் நிதி நெருக்கடி காரணமாக சம்பளம் வழங்க முடியாததாலும் நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தல் நெருங்கிவரும் வேளையில் அவசியமற்ற நியமனங்களை வழங்கி குறுகிய அரசியல் இலாபம் பெற சில அரசியல்வாதிகள் முயல்வதால் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மேல் மாகாணத்தில் மீண்டும் பொலிஸ் பதிவு

(கொழும்பு)

கடந்த 5 வருடத்திற்குள் மேல்மாகாணத்தில் வந்து குடியேறியவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மீண்டும் நடைபெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களை களையாவிட்டாலும் மக்கள் வெளியேற அனுமதியுங்கள்

### புலிகளிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களையாவிட்டாலும் பரவாயில்லை. அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களை வெளியேற அனுமதிக்க வேண்டும் என ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

தகவல் (12ஆம் பக்கம் பார்க்க)



சிறுவர்களை மீட்போம்

சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர் தலைமையதிபதி செயலகம்

unicef

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சர்வதேச நிறுவனங்களில் விடுதலைப் புலிகள் ஊடுருவல்

## சந்தேகத்தைக் கிளப்புகிறார் கெஹலிய



வடக்கில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் படை நகர்வுகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையின் பின்னணியை ஆராயும் போது சர்வதேச நிறுவனங்களில் புலிகள் ஊடுருவியுள்ளனரா என்ற சந்தேகம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார் .

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப் புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடந்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது; விடுதலைப்புலிகள் சார்பு இணையத் தளமான தமிழ் நெற் மூலம் பெற்ற தரவுகளின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் இந்த முயற்சியை அரசு வன்மையாக கண்டிக்கிறது.

இந்த வருடம் ஜனவரி மாதம் 20ம் திகதிக்கு பின்னர் 2 ஆயிரத்து 800 தமிழ் சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்து ள்ளதாகவும் நவநீதம்பிள்ளை தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இது அடிப்படை ஆதாரமற்றது.

இலங்கையில் இயங்கும் ஐ.நா காரியாலயத்தினுடாக அவர் வடக்கு நிலைமைகள் தொடர்பான தகவல்களை திரட்டியிருக்கலாம். இதைவிடுத்து அவர் புலிகள் சார்பு இணையத் தளமான தமிழ் நெட்டில் தரவுக ளை பெற்றுள்ளமை பெரும் சந்தேக த்தை ஏற்படுத்துகின்றது.

இதன் மூலம் அவர் இலங்கையின் இறைமைக்கு பங்கம் விளை வித்துள்ளார். அத்துடன் சர்வதேச ரீதியில் ஐ.நா அமைப் பின் நம்பகத் தன்மையைக் கேள்விக் குறியாக்கியுள்ளார்.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டுவதில் முழு உலகமும் ஒன்று திரண்டு ஓரணியில் செயற்படும் இவ்வேளையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கை அதிருப்திக்குரிய விடயமாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# ஆண்டு விழாவும் பரிசளிப்பும்

(பொன்னாலை)

மூளாய்வீதி-வட்டுக்கோட்டை சுரேஸ் கல்வி வளர்சோலையின் 28 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலைய இயக்குநர் கே.எஸ்.சின்னையா தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி பிரதம விருந்தினராகவும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை இயக்குநர் சபைச் செயலாளர் விஸ்வநாதன், சமாதான நீதவான் கே.இராசையா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-49)

# உ.கிழங்கு; பெ.வெங்காயத்தை கொழும்பிலிருந்து எடுத்து வராதீர்கள்

## வர்த்தகர்களிடம் யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் விவசாயிகளின் நலன்கருதி உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் என்பவற்றை கொழும்பிலிருந்து எடுத்து வருவதை தவிர்க்குமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது.

உருளைக்கிழங்கு,பெரிய வெங்காயம் என்பவற்றின் அறுவடைக்காலம் தற்போதாக இருப்பதால்;

யாழ்ப்பாண வர்த்தகர்கள் ஒருமாத காலத்திற்கு மேற்படி பொருட்களை கொழும்பிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டாம் என வணிகர் கழகம் கேட்டுள்ளது.

# வலிகாமம் கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம்

(மல்லாகம்)

வன்னி மாவட்டத்தில் கடமையாற்றி தற்போது வலிகாமம் கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கான சம்பளப்பட்டியல் மாகாண கல்வித் திணைக்கள கணக்காளரால் அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

எனவே குறித்த ஆசிரியர்கள் தமது வரவுச் சான்றிதழ்களுடன் இன்று அல்லது நாளை வலி காமம் வலய கல்வித்திணைக்கள த்திற்கு வந்து கையொப்பமிட்டு சம்பளங் களைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ச-5)

# நீராவியடியில் நேற்று அதிகாலை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதி நீராவியடியில் உள்ள வீடொன்றில் நேற்று அதிகாலை திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வீட்டின் புகைக்கூடு ஊடாக கயிறுகட்டி இறங்கிய திருடர்கள் அங்கிருந்த சுமார் 7 பவுண் தங்கநகைகளை திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் உறக்கத்தில் இருந்த போது திருடர்கள் தமது கைவரிசையைகாட்டியுள்ளனர். மேசைக்கு மேல் இருந்த, தாம் அன்றாடம் பயன்படுத்தும் நகைகளையே திருடர்கள் எடுத்துச் சென்றதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச)

# கல்வி நிர்வாக சேவை தரம் III

## தெரிவு செய்யப்பட்டோருக்கு கொழும்பில் 9 மாத காலப்பயிற்சி

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு நியமனம் பெற்றுக்கொள்பவர்களுக்கான ஒன்பது மாத காலப் பயிற்சி எதிர்வரும் 23ம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சிக்கு கலந்து கொள்ளவுள்ளவர்கள் கொழும்பு செல்வதற்கு பாதுகாப்பு அனுமதியை பெற்றுக் கொள்ளவேண்டும். எனவே பயிற்சிக்கு செல்லவுள்ளவர்கள் கிராமசேவையாளர், பிரதேச செயலர் ஊடாக யாழ். மாவட்ட செயலருக்கு விண்ணப்பங்களை உரிய படிவங்களில் விரைவாக சமர்பிக்குமாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு நியமனம் வழங்குவதற்கு அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு;

கே.ஏ.சிவனருள்ராஜா-கணுக்கேணி மேற்கு முள்ளியவளை, ஜி.டி. தேவராஜா-பெதல் புலோலி மேற்கு புலோலி, கே.மணிமாறபிலன்-சிந்துபுரம் வட்டுக்கோட்டை, ரி.முகுந்தன்-அருணோதயம், நாவலடி புலோலி மத்தி பருத்தித்துறை, எஸ்.தட்சாஜினி-8ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, வி.வல்லிபுரம்-10 வேம்படி றோட் யாழ்ப்பாணம், பி.ஜி.ஜோசெப்- 2ஆம் ஒழுங்கை பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு கொக்குவில் யாழ்ப்பாணம், வை.லாவண்யா-108 பிறவுண் றோட் யாழ்ப்பாணம், எஸ்.புவனேந்திரன்-சாரதா வீதி காரைநகர்-2. (ச)

# சுப்பர் லீக் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாண உதைப்பந்தாட்ட லீக்குக்கும் பருத்தித்துறை லீக்குக்கும் இடையிலான சுப்பர் லீக் உதைப்பந்தாட்ட போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் வெற்றிபெறும் அணி தென்பகுதிக்குச் சென்று போட்டிகளில் கலந்து கொள்ளும் என தெரிவிக்கப்பட்டது. (ச)


BALARAJI SOCIAL MOBILIZAION

பாலராஜி சமூகவலுவூட்டல் நிறுவனம்

T.P. :- 0779789341

இல. 249, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டில் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினை பெற or நீங்களாகவே சுயதொழில் ஆரம்பிப்பதற்கு எம்மோடு இணையுங்கள்.

பயிற்சிகள் வாரநாள்,வார இறுதிநாட்களில் நடைபெறும்

**பயிற்சிகள் விபரம்**

1. வீட்டு மின்னிணைப்பு -3 மாதம்
2. மோட்டார் றீவைண்டிங் -3 மாதம்
3. மகளிர்க்கான ஆடை தயாரித்தல் (தையல்) -4 மாதம்
4. அழகுக்கலைப் பயிற்சி (பேசியல்,சிகை அலங்காரம், சாறி வேக்) -2 மாதம்
5. தையல் இயந்திரம் திருத்துதல் -4மாதம்
6. கேக் மற்றும் ஐசிங் போன்றன தயாரித்தல் -2மாதம்
7. அலுமேனியப் பிற்றிங் -5மாதம்
8. கழிவுப்பொருட்களில் அலங்காரப் பொருட்கள் தயாரித்தல் (Handy craft) -2மாதம்
9. துணி, கண்ணாடி போன்றவற்றில் பெயின்றிங் -2 மாதம்
10. கணனிப்பயிற்சி MS OFFICE, DTP, ICT

இப்பயிற்சிகள் 24.03.2009ஆம் திகதி ஆரம்பம்

உடல் உள ஆரோக்கியத்திற்கான யோகாசனப் பயிற்சிகள். நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட பயிற்சிகளும் வழங்கப்படும்.

மாணவர்களிற்கு எமது நிறுவனச் சான்றிதழ் மற்றும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் சான்றிதழ் பெற்றுத் தரப்படும்.

நிபுணத்துவம் மிக்க ஆசிரியர் குழுவினால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாணவர்களிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.

*பயிற்சி பெறும் ஒவ்வொருவரையும் நாம் 100% தொழில் வல்லுநர்களாக உருவாக்குவோம்.

-இயக்குநர்

(C-2205)


# கொழும்பில் கைது செய்யப்பட்ட

## வித்தியாதரனை 3 மாதங்கள் தடுத்துவைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

உதயன், சுடர் ஒளி பத்திரிகைகளின் ஆசிரியர் என்.வித்தியாதரன் கொழும்பு கோட்டை பிரதம நீதவான் நீதி மன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவினர் அவரை நீதிமன் றத்தில் ஆஜர் செய்திருந்தனர்.

சுடர் ஒளி பத்திரிகையின் ஆசிரியர் என்.வித்தியாதரனின் தொலை பேசியுடன் தொடர்பு கொண்ட தொலைபேசியின் இலக்கங்கள் குறித்து தொடர்ந்தும் விசாரணை நடத்துவதாக பொலிஸ் குற்றத்தடுப் புப்பிரிவினர் நீதிமன் றத் தில் அறிவித்தனர்.

சர்வதேச ரீதியில் இந்த தொலைபேசியுடன் ஏற்படுத்தப்பட்ட அழைப்புகள் மற்றும் இந்த, தொலை பேசி ஊடாக வெளிநாடுகளில் ஏற்படுத்தப்பட்ட அழைப்புகள் குறித்து விசாரணை முடியவில்லையென பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்பிரகாரம் ஊடகவியலாளர் என்.வித்தியாதரனை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் 3 மாதம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு செயலாளர் அனுமதி வழங்கியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இதனையடுத்து வித்தியாதரனை தொடர்ந்தும் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் பிரிவில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் அ மதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதியை கொழும்பு கோட்டை பிரதம நீதவான் ஜிகான் பெலப்பிட்டிய வழங்கினார். (ச-3,14)

# இன்று ஒரு தகவல்

## பெண் – ஒரு விஞ்ஞானப் பார்வை

என் நண்பர் ஒருவரைப் பார்த்து, ''அறிவில் சிறந்தவர்கள் ஆண்களா? பெண்களா?'' என்று கேட்டேன்.

அவர் மெதுவாக தலையை சொறிந்து கொண்டே, "அதிலென்ன சந்தேகம்... அவர்கள் தான்!" என்றார்.

அனுபவ அடிப்படையில் அவர் இப்படிச் சொல்கிறார். அறிவியல் அடிப்படையில் நோக்குபவர்களும் இப்படித் தான் சொல்கிறார்கள்.

இயற்கையின் நோக்கம் இனப்பெருக்கம். இதில் பெண்களின் பங்கு அதிகம். அதனால் இயற்கையே பெண்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. சக்தியைக் கொடுத்திருக்கிறது.

வெளிநாட்டில் இதைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்து புள்ளி விபரம் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆண் குழந்தைகளை விட பெண்குழந்தைகளே முதலில் பேச ஆரம்பித்து விடுகிறார்களாம். அதிக எண்ணிக்கையில் வார்த்தைகளைக் கற்றுக் கொள்வது, பலவிதமான வாக்கிய அமைப்புகளை அமைத்துப் பேசுவது, இவற்றையெல்லாம் விரைவாக செய்வது பெண் குழந்தைகள் தானாம்.

சம வயதுள்ள ஆண் – பெண் குழந்தைகளை வைத்து ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள்.

ஒரே கேள்வியைப் பலவிதமாக கேட்பது, ஒரே விடயத்தை வேறு வேறு கோணங்களில் இருந்து விளக்குவது, தவறில்லாமல் பேசுவது, வேகமாகப் படிப்பது, எழுதுவது, புரிந்து கொள்வது என்பவற்றிலெல்லாம் ஆண் குழந்தைகளை விட பெண்குழந்தைகள் ஒன்றரை மடங்கு அதிகத் திறமை உள்ளவர்களாக இருக்கிறார்களாம்.

இன்னொரு மொழியைக் கற்றுக் கொள்வது, பேசுவது, எழுதுவது என்பவற்றில் கூட பெண்களுக்குத் தான் அதிகத் திறமையாம்.

புள்ளிவைத்து கோலம் போடுவதிலிருந்து கைக் கடிகாரங்களிலும், கம்ப்யூட்டர்களிலும் நுண்ணிய பாகங்களைப் பொருத்துவது வரை பெண்கள் திறமையாகச் செய்கிறார்களாம்.

அமெரிக்காவில் இன்னொரு சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். அதில் பெண்களின் மூக்கு, மோப்ப உணர்வு எப்படி என்று பார்த்திருக்கிறார்கள்.

அதிக எண்ணிக்கையில் வாசனைகளைப் பிரித்து கண்டு பிடிக்கிறார்களாம். அந்த அளவுக்கு ஆண்களால் முடியவில்லையாம். செவிப்புலன் உணர்வும் பெண்களுக்குத் தான் அதிகமாம்.

ஒரு கும்பலில் பலவிதமான சத்தம், அதற்கு இடையில் குரலின் தொனி, ஏற்ற இறக்கம் இதை வைத்தே பேசும் ஆளைக் கண்டு பிடித்து விடுகிறார்களாம்.

ஒரு பொருளைப் பார்த்தவுடன் அது என்னவென்று கண்டு பிடிப்பது, அதை மனதில் பதிய வைப்பது, அதன் பின் இன்னொரு சந்தர்ப்பத்தில் அது எங்கே இருந்தது என்று சரியாக ஞாபகப்படுத்திக் கொள்வது இதிலெல்லாம் பெண்கள் தான் முன்னணியில் இருக்கிறார்கள்.

அதிகமான தோழமை உணர்வுடன் பேசுவதும் அவர்கள் தான். பெண்கள் இருவர் பேசிக் கொண்டிருப்பதையும், ஆண்கள் இருவர் பேசிக்கொண்டிருப்பதையும் பாருங்கள். ஆண்கள் ஓரடி தள்ளி நின்றே பேசிக் கொண்டிருப்பார்கள்.

சிரித்த முகத்துடன் நோயாளியிடம் பரிவுடன் பேசுவதில் பெண் டாக்டர்கள் தான் அதிகம்.

இதுவரை கூறியதெல்லாம் ஏதோ பெண்களுக்கு 'ஐஸ்' வைப்பதற்காக என்று யாரும் நினைத்து விட வேண்டாம். இது எல்லாமே விஞ்ஞான ரீதியான விடயங்கள். ஆராய்ச்சியாளர்கள் சொல்லியிருக்கும் செய்திகள்.

அனுபவத்திலும் நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்.

நம் வீடுகளிலேயே பெண் பிள்ளைகள் புரிந்து கொள்ளும் அளவுக்கு ஆண்பிள்ளைகள் புத்திசாலித்தனமாக எதையும் புரிந்து கொள்வதில்லையே!

ஒரு பையன், தன்னுடைய தாய் – தந்தையரின் திருமண அல்பத்தை புரட்டிக் கொண்டிருந்தானாம். அப்பொழுது அவன், "அம்மா இந்தப் படத்தில் மீசையுடன் அழகாக சிரித்துக்கொண்டு நிற்பது யார்?" என்று கேட்டானாம்.

"அதுதான் உங்கள் அப்பா" என்றார் அம்மா.

அப்படியானால் இப்பொழுது நம் வீட்டில் நரைத்த தலையுடன் அழுது கொண்டிருக்கிறாரே... அவர் யார்?" என்றானாம் அந்தப்பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மோதல் பிரதேசங்களில் சிறுவர்களை பாதுகாக்க விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்

## யுனிசெவ் நிறுவனம் வேண்டுகோள்

இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் மோதல்களில் பாதிக்கப்பட்ட மற்றும் காயமடைந்த சிறுவர்களை பாதுகாப்பதில் விசேட கவனம் செலுத்துமாறு ஐ.நாவின் சிறுவர்களுக்கான நிதியமான யுனிசெவ் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மோதல் பிரதேசங்களில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் உயிரிழப்பதாகவும், ஆயிரக்கணக்கான சிறுவர்கள் தொற்று நோய்களுக்கு உள்ளாவதுடன் போதிய உணவின்றி குறை போசணையுடன் காணப்படுவதாக யுனிசெவ்வின் நிறைவேற்று பணிப்பாளர் ஆன் எம் வெனிமன் அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தார்.

மேலும், ''வழமை போன்று குறித்த பகுதிகளிற்கு உயிர்காப்பு நடவடிக்கைகளிற்கும் விநியோக பணிக்ளை மேற்கொள்ளவும் மனிதாபிமான தொண்டு நிறுவனங்கள் உடனடியாக அவசியமாகும்.

அத்துடன் மோதல் பகுதிகளில் சிக்கியுள்ள பொதுமக்கள் மனிதாபிமான உதவிகள் உடனுக்குடன் கிடைக்கக் கூடிய இடங்களை நோக்கி பாதுகாப்பாகச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

மோதல்களில் சிக்கியுள்ள சிறுவர்களின் உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர் உயிரிழப்புக்களை தடுப்பதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என ஆன் எம் வெனிமன் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ–5)

# ஈழத் தமிழரின் அவலங்கள் குறித்து அவுஸ்திரேலியாவில் கவனயீர்ப்பு போராட்டம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா பேர்த் மாநகரத்தில் புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் ஒன்றுகூடி பாராளுமன்றம் முன்பாக ஈழத்தமிழர் படும் அவலங்களையும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையையும் வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டனர்.

ஈழத்தமிழரின் அவலங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் திரட்டப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை பாராளுமன்ற உறுப்பினர் பில்ஜோன்ஸ்ரனிடம் 'கையளித்தனர்.

நேற்று புதன்கிழமை பகல் 12.00 மணியளவில் தொடங்கிய கவனயீர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடி தமது ஆதங்கங்களை வெளிக்காட்டியதுடன் தமிழின அழிப்புக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

இதன்போது ஈழத்தமிழருக்கு ஆதரவான கோஷங்கள் முழங்கப்பட்டன.

நிகழ்ச்சியின் முடிவில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பில் ஜோன்ஸ் ஈழத்தில் தமிழர் படும் அவலத்தை பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறுவதாக உறுதியளித்தார்.

மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஈழத்தமிழரின் அவலங்களை மக்களிடம் கேட்டு அறிந்து கொண்டனர். (ஓ–6)



கொடிகாமம் போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் நடைபெற்ற மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் முறைசாராப் பயிற்சி நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் மாணவி செ. நிருஷாவிற்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும் அருகில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜ மூர்த்தி, வித்தியாலய முதல்வர் த. கோபாலகிருஷ்ணன், ஆசிரியை இ. சுகிர்தா ஆகியோர் காணப்படுவதையும் கற்றல் நிகழ்வில் ஈடுபட்டுள்ள மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

*19.03.2009*
*(பங்குனி 6, வியாழக்கிழமை)*
*அட்டமி பிற்பகல் 1.44 மணிவரை*
*மூலம் மாலை 6.33 மணிவரை*
*இராகுகாலம் 1.48-3.18 மணிவரை*
*சுபநேரம் 7.48-9.18 மணிவரை*
*அட்டமி , நவமி*

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், பிரயாணம், வீண்பயம், கட்டுப்பாடு. |
| இடபம் | எதிர்பாராத பகை, காரிய தடங்கல், பிரயாண பயம், போசன சுகம். |
| மிதுனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, களஸ்திர நன்மை, தொழில் விருத்தி, பொருள் சேர்க்கை. |
| கடகம் | தேக நலன், நல்ல வரவேற்பு, காரிய நன்மை, பணவருவாய். |
| சிங்கம் | உடல் நலக்குறைவு, வியாபார விருத்தி, முயற்சி தாமதம், குடும்பக் கவலை. |
| கன்னி | உறவினர் சந்திப்பு, சுபநிகழ்வு, மனச்சஞ்சலம், முயற்சிதாமதம். |
| துலாம் | வாக்குமேன்மை, பிரயாண சுகம், தொழில் விருத்தி, சகோதரர் உதவி. |
| விருச்சிகம் | கௌரவக்குறைவு, பணவிரயம், உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| தனுசு | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, புதிய தகவல், வாக்கு மேன்மை. |
| மகரம் | தொழில் சிந்தை, கோபப்படுதல், முயற்சி தாமதம், தனவிரயம். |
| கும்பம் | எடுத்த கருமங்கள் நிறைவேறும், தனலாபம், உறவினர் வருகை, போசன சுகம். |
| மீனம் | நல்ல தகவல், அதிக பிரயாசை, போசன சுகம், நண்பர்கள் உதவி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 |
| பச்சைமிளகாய் | 50 | 60 |
| தக்காளி | 25 | 40 |
| அவரை | 20 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 15 | 30 |
| புடோல் | 20 | 25 |
| வாழைக்காய் | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 25 | 30 |
| பெரிய வெங்காயம் | 35 | 40-45 |
| பாகற்காய் | 60 | 60 |
| வெண்டிக்காய் | 25 | 35 |
| கரணைக் கிழங்கு | -- | -- |
| பயிற்றங்காய் | 40 | 50 |
| லீக்ஸ் | 120 | 120 |
| போஞ்சி | 60 | 70 |
| கீரை – 1 பிடி | 10 | -- |
| தேசிக்காய் | 140 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35-40 |

## வடபிராந்திய போக்குவரத்து சபையின்

# கோண்டாவில் சாலையை தரமுயர்த்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை

## ஆராய உயர் மட்டக்குழு ஏப்ரலில் யாழ். வருகை


(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையை முதலாம் தர சாலையாக தரம் உயர்த்துவது குறித்து ஆராய கொழும்பு போக்குவரத்து சபையிலிருந்து உயர்மட்ட குழு அடுத்த மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளது.

மகிந்த சிந்தனையின் பிரகாரம் வடபிராந்திய போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையை முதலாம் தர சாலையாக தரமுயர்த்தி 50 புதிய பஸ்கள் வழங்கப்படுவதுடன் புதிய போக்குவரத்து சேவைகளை வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் இது குறித்து ஆராய போக்குவரத்து அமைச்சு மற்றும் போக்குவரத்து சபையிலிருந்து உயர்மட்ட அதிகாரிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

இவ் அதிகாரிகளின் விஜயத்தின் போது வடபிராந்திய போக்குவரத்து சபையின் கீழ் பட்டதாரி பயிலுனர்களாக பணியாற்று பவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (5)



துன்னாலை தெற்கு கலிகைக்கந்தன் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற பனம்பொருள் கைப்பணிக் கண்காட்சியில் வடமராட்சி தெற்கு -மேற்குப்பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும் துன்னாலை கிழக்கு தெற்கு கிராம அலுவலர் க.பரம்சோதி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## கோப்பாய் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்விக் கோட்ட புத்தூர் குடும்ப பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் யாழ். கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேத நாயகம் தலைமையில் நாளை பிற்பகல் 10 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் குடும்பப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (5-7)

## கடல் உணவுகளை தென்னிலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 பாதையூடாக தென்னிலங்கைக்கு கடலுணவு களை எடுத்துச் செல்வதற்கான ஆயத்த வேலைகளில்மாவட்ட கடற்றொழிலாளர்கள்கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் ஈடுபட்டுள்ளது.

ஏ-9 தரை வழிப் பாதையூடாக கடலுணவு பொருட்களை குளிரூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாதையூடான போக்குவரத்து சுமுகநிலையை அடைந்தவுடன் கடலுணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுமெனவும் கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

பலாலி இராணுவத் தளபதியுடனான சந்திப்பின் போது தரைவழிப்பாதையூடாக கடலுணவுகளை எடுத்துச் செல்வதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதெனவும் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (5)

## திருச்சிலுவைப் பாதை

ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்திலிருந்து நாளை வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புனித - திருச்சிலுவைப்பாதை ஆரம்பித்து மண் குழி வீதி, கல் ஒழுங்கை பிரதேச சபை சந்தியால் சென்று புனித, குழந்தை இயேசு வழிபாட்டுத் தலத்தில் திருப்பலி நடைபெற்று நிறைவு பெறுகின்றது. (ஓ-72)

## ஆனைக்கோட்டையில்

# அனுமதியின்றி இடம்பெறும் மீன் சந்தையை நிறுத்துமாறு அறிவிப்பு

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை கரப்பிரான் பிள்ளையார் கோயில் வீதியில் மாலை நேரம் அனுமதியின்றி நடத்தப்படும் மீன் சந் தையை நிறுத்துமாறு வலி தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் அறிவித் துள்ளார்.

குறித்த இடத்தில் வியாபாரத்தில் ஈடுபடும் மீன் வியாபாரிகள் சாவற்கட்டு ,காக்கைதீவு மற்றும் நவாலி ஆகிய மீன் சந்தைகளில் தமது வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

ஆனைக்கோட்டை கரப்பிரான் பிள்ளையார் கோயில் வீதியில் மாலை நேரங்களில் அனுமதியின்றி மீன் சந்தை இயங்குவதால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் மீன் சந்தை இயங்குவதால் அப்பகுதியிலேயே கழிவுகள் கொட்டப்படுவதால் குறித்தபகுதியில் சுகாதார சீர்கேடும் ஏற்படுவதாக வலி தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த பகுதியில் இரண்டு பரப்புக்காணி ஒன்றினை பிரதேச சபைக்கு நன்கொடையாக பொதுமக்கள் வழங்குவார்களாயின் மீன் சந்தை அமைத்துக் கொடுக்கப்படும் என தெரிவித்த வலி தென்மேற்கு பிரதேசசபைச்செயலாளர் அவ்வாறு வழங்கத் தயாராகவுள்ளோர்கள் பிரதேச சபைத் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார். (5)

# ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு புதிதாக கட்டடம் அமைப்பதற்கு உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியத்திடம் இருந்து 21 மில்லியன் ரூபாய் நிதியுதவியைக் கோரியிருப்பதாக ஊர்காவற்றுறைப்பிரதேச சபைச் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊர்காவற்றுறை பிரதேச சபை நீண்ட காலமாக தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

இதனால் பிரதேச சபைக்கு சொந்தமாக புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு அண்மையில் சுருவில் வீதியில் உள்ள 10.5 பரப்புக் காணி 9இலட்சத்து 80ஆயிரம் ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்டது.

இக்காணியில் பிரதேச சபை கட்டடத்தை அமைப்பதற்கான 21 மில்லியன் ரூபாய் நிதியுதவியை வடக்கு மாகாண சபையூடாக உள்ளூராட்சி உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அவ்வாறு அந்நிதியத்திடம் இருந்து நிதி உதவி கிடைக்கும் போது 60 வீதமான தொகை நன்கொடையாகவும் 33 வீத நிதி 12 வருட 9 வீத வட்டியுடனான கடனாகவும் அமையும் என்றார் ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா. (5)

# முதலாம் காலாண்டுக்குரிய மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றன

## சுகாதார சேவைப் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

முதலாம் காலாண்டுக்குரிய மருந்து வகைகள் இரண்டாம் கட்டமாக எடுத்துவரப்பட்டு வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுவருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

ஏற்கனவே எடுத்துவரப்பட்ட 30 வீதமான மருந்துவகைகள் இவ்வருட ஆரம்பத்தில் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர் மிகுதி 70 வீதமான மருந்து வகைகள் தற்போது எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இம் மருந்து விநியோகப்பணிகள் அடுத்த வாரம் நிறைவடையும் எனவும் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை உரும்பிராய் மத்திய மருந்தகத்தின் கட்டடப் பணிகள் முடிவுறும் நிலையில் அடுத்த மாத இறுதியில் திறந்து வைக்கப்படும் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (5)



நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சி.அமிர்தலிங்கம்,பாடசாலை அதிபர் க.வடிவேல் ஆகியோர் உரையாற்றுவதையும் , பாடசாலை அபிவிருத்தி சங்க உப செயலாளர் ந.சுகுமார் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- இருபாலை நிருபர்)

# இலங்கையில் தமிழர் 100

## ஹெளவரும் தமிழரும்

### உறுதிபெற்ற இனக்குழுக்கள் 900-1070

**சோழர் காலத்து முன்னேற்றங்கள்**

அரசியல் ஆதிக்க வளர்ச்சி பெரிதும் ஏற்பட்ட சோழப் பேரரசின் காலம், தென்னிந்தியாவில் முக்கியமான பொருளியல், பண்பாடு மற்றும் சமயம் சார்ந்த வளர்ச்சிகள் ஏற்பட்ட காலமாகவும் சிறப்புப் பெறுகின்றது. உள்நாட்டு வர்த்தகமும் கடல் கடந்த வர்த்தகமும் இக்காலப்பகுதியில் துரித வளர்ச்சியடைந்த போது, வலிமை வாய்ந்த வணிக கணங்கள் ஆதிக்கம் பெற்றுத் தங்கள் செல்வாக்கைத் தென்னிந்தியா முழுவதும் மட்டுமல்லாது இலங்கை, தென்கிழக்காசியா மற்றும் சீனா ஆகிய இடங்கள் வரை பரப்பின. கிழக்குக் கரையில் வடக்கே விசாகபட்டினம் தொடங்கி தெற்கே நாகபட்டினம் போன்ற பல துறைகளில் நன்மைக்கப்பட்ட வணிக கணங்கள் கிழக்கு நோக்கிய கடல் வர்த்தகத்தில் ஈடுபட்டன. இவ் வர்த்தகத்தில் சீனாவுடன் நடந்த வர்த்தகம் இக் காலத்தில் சிறப்பிடம் பெற்றது.

சோழ மன்னர்கள், குறிப்பாக முதலாம் ராஜராஜசோழனும் முதலாம் ராஜேந்திர சோழனும், சீனப் பேரரசன் சபைக்குத் தூதுக்கள் அனுப்பியமை சீன ஆவணங்கள் மூலம் அறியப்படுகின்றது. கிழக்கு நோக்கிய வர்த்தகம் போன்று மேற்கே அரேபியா, பாரசிகம் (ஈரான்) மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுடனும் முக்கிய வர்த்தகம் இக்காலத்தில் நடைபெற்றது.

உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக முக்கியமான நகர மையங்கள் தென்னிந்தியாவில் பரவலாகத் தோன்றின. இவை "பட்டணம்", "நகரம்" என்ற பெயர்களைப் பெற்று, பொருளியல் வளர்ச்சியில் முக்கிய இடத்தைப் பெற்றன.

இக்காலத்தில் வர்த்தகத்தைப் போன்று விவசாயமும் பெரு வளர்ச்சியடைந்தது. இதற்கு ஒரு முக்கிய காரணம் நீர்ப்பாசனவியலில் ஏற்பட்ட முன்னேற்றமாகும். பொதுவாக வரலாற்றாசிரியர்களுடைய கவனத்தை இது ஈர்க்கத் தவறியுள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வளர்ச்சியடைந்து வந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் சோழர் ஆட்சியின் போது உச்சக்கட்டத்தை அடைந்தது. இக்காலத்தில் உலகிலேயே மிகப் பெரிய, மனிதரமைத்த, நீர்ப்பாசன குளம் என வர்ணிக்கப்பட்டுள்ள பெரும் குளமாகிய வீராணம் ஏரி தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டது. இலங்கையில் நீர்ப்பாசன வசதிகள் அமைக்கப்பட்ட வரலாற்று விபரங்கள் பாளி வரலாற்றேடுகளில் கொடுக்கப்பட்டிருப்பதால் குளங்களையும் கால்வாய்களையும் அமைப்பதற்குப் பொறுப்பாக இருந்த மன்னர்களையும் பிற உயர் குழாத்தினரையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆனால் இத்தகைய வரலாற்றேடு எதுவும் தமிழ்நாட்டில் பேணப்படாத காரணத்தால் அங்கு நீர்ப்பாசனத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் அவற்றுக்கு உதவியோர் விபரங்களையும் அறியமுடியவில்லை. கல்வெட்டுக்களும் இதுதொடர்பாக அதிகம் தகவலைத் தரவில்லை. தொல்லியல் சான்று கொண்டே நீர்ப்பாசனவியல் வரலாற்றை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

**கட்டடக் கலை**

சோழப் பேரரசர் காலம் இணையற்ற வகையில் கோயில்கள் அமைக்கப்பட்ட காலமாகும். பெருந்தொகையான கோயில்கள் மட்டுமின்றிப் பெரிய அளவிலான கோயில்களும் இக்காலத்தில் கட்டப்பட்டன. இவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்றதும் மிகப் பெரியதும் முதலாம் ராஜராஜன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் எனப் பொதுவாகப் பெயர் பெறும் ராஜராஜேஸ்வரமாகும். தற்கால நகர் ஒன்றின் நடுவே இன்றும் சிறப்புடன் விளங்கி நாள்தோறும் வழிபாடு நடக்கும் கோயிலாக உள்ள இப் பெரும் கட்டடம் 'தென்னிந்திய வரலாற்றில் உன்னத காலம் ஒன்றின் தலைசிறந்த கட்டடமாக மட்டுமின்றி, தமிழர் கட்டடக் கலையின் மிகச் சிறந்த நிலையை வெளிப்படுத்தும் மிக அழகிய எடுத்துக்காட்டாகவும்' வர்ணிக்கப்பட்டுள்ளது.

இக்காலத்தில் கோயில் என்ற நிறுவனம் சமய வழிபாட்டுத் தலமாக மட்டுமல்லாது பல்வகைப்பட்ட செயல்கள் நடைபெற்ற மையமாகவும் விளங்கியது. அரசியல், நிதி நிர்வாக மற்றும் பண்பாடு போன்ற பல்வேறு துறைகள் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிக்கலான அமைப்பைக் கொண்ட ஒரு நிறுவனமாக கோயில் விளங்கியது.

பிற கலைகள் பேரரசுச் சிறப்பு நிலவிய காலங்களில் எதிர்பார்க்கக் கூடியதுபோல், சோழர் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் தென்னிந்தியாவின் நுண் கலைகள் மலர்ச்சியடைந்து உன்னத நிலையை அடைந்தன. இக் கலைகளுள் சிற்பக்கலை, குறிப்பாக உலோகச் சிற்பக்கலை, அதன் வளர்ச்சியின் உச்சக்கட்டத்தை அடைந்தது. இதன் விளைவாகத் தென்னாசியாவிலே ஆக்கப்பட்ட உலோகச் சிற்பங்களுள் மிகச் சிறந்தவை எனக் கருதப்படும் வெண்கலச் சிற்பங்கள் இக் காலத்தில் செய்யப்பட்டன. சோழர் கால உலோகச் சிற்பங்களுள் உன்ன இடத்தைப் பெறும் சிற்பம் நடராஜர் சிலையாகும்.

நடனம், இசை மற்றும் நாடகம் ஆகிய கலைகள் கோயில்களுக்கு அளிக்கப்பட்ட சிறப்புக் கொடைகள் மூலமாக வளர்க்கப்பட்டன. பொதுமக்கள் பண்பாடு மற்றும் பொதுமக்கள் பொழுதுபோக்கு, உல்லாசம் ஆகியவற்றுக்கு உதவிய செயல்கள் இடம் பெற்ற ஒரு மையமாகக் கோயில் விளங்கியதால், அங்கு ஒழுங்காக நடைபெற்ற கிரியைகளில் இசையும் நடனமும் மட்டுமல்லாது மக்கள் மனதைக் கவர்ந்த கதைகளைப் பொருளாகக் கொண்ட நாடகங்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. விழாக்காலங்களில் இவை மேலும் முக்கியத்துவம் பெற்றன. இவற்றைச் சிறப்புடன் வளர்ப்பதற்குக் கோயில்களில் நாடக சாலைகளும் அமைக்கப்பட்டன.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

கோயில்களில் இசைக் கலைஞர்களாகிய பாடகர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்கள், நடன ஆசிரியர்களாகிய நட்டுவனார் கள், நடன மாதராகிய தேவரடியார் ஆகியோருடைய பராமரிப்புக்கெனச் சிறப்புக் கொடைகள் வழங்கப்பட்டன. தென்னிந்திய நாகரிகத்தின் இரு சிறப்புச் சின்னங்களாக அமையும் பரத நாட்டியமும் கர்நாடக இசையும் உருவாகுவதற்கு சோழர் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பெரிதும் உதவின என்பதில் ஐயமில்லை. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

20

ஒரேயொரு பிரச்சினை: ஒபாமாவின் தந்தை எங்கே? அவர் உலகத்தை விட்டு நீங்கிவிட்டார். தாயோ பேரன் பேர்த்தியோ கூறிய எதுவும் அவரின் அந்தத் தீர்க்க முடியாத பிரச்சினைக்குத் தீர்வாகாது.

அவர்கள் கூறிய எதுவும் அப்பா ஏன் சென்றார்? அவர் போகமலிருந்திருந்தால் எப்படி யிருந்திருக்கும்? என்ற வினாக்களுக்கு விடை தரவில்லை.

கதைகளுக்கு முண்டு கொடுக்கும் ஒருவராகத் தான் ஒபாமாவின் தந்தை வர்ணிக்கப்பட்டார். இதுவிடயத்தில் ஒபாமா தன் தாயையோ அல்லது தாத்தா பாட்டியையோ குற்றம் கூற வில்லை.


தந்தை அமைத்த தனது உருவ கத்தை உவந்து இருப்பார். அவரும் உடந்தை யாக இருந்திருப்பார். அவரின் பட்டமளிப்பு முடிந்த பின் ஹொணலுலு ( HONOLULU STAR-BULLETIN) நட்சத்திர சஞ்சிகையில் சீனியர் ஒபாமாவின் நேர்காணல் வெளிவந்தது. அதில் அவர் முன்மாதிரியானவராக, ஆபிரிக்கக் கண்டத்தின் தூதுவனாகத் தோற்றமளிக்கிறார்.

ஹவாய் பல்கலைக்கழகத்தை மென்மையாகச் சாடுகிறார். வருகை தரும் மாணவர்களை விடுதி அறைகளில் மந்தைகளை அடைப்பதுபோல் அடைத்து தாங்கள் போட்ட அட்டவணையின்படி கலாசார பரிவர்த்தனை வகுப்புகளுக்குச் செல்லும் படி வற்புறுத்துவது மாணவர்களின் கவனத்தை திசை திருப்புவதாக அமைந்துள்ளது.

இதற்குப் பதிலாக அவர்களுக்கு கற்ற கல்வியின் அடிப்படையில் பயிற்சி அளித்திருக்கலாம்.

மாணவர்களிடையே இருந்த வழக்கம் ஒன்று கண்டனத்துக்குரியது. தாங்களே தங்களை ஒதுக்கி வாழத் தலைப்படுகிறார்கள். இது பல்லின மாணவர்களிடையே இருந்த குறுகிய பழக்கமாகும்.

வெளிப்படையாகவே தங்களுக்குள் இனப் பாகுபாடு காட்டுவதைக் கண்டித்து எழுதுகிறார். ஆனால் தான் இத்தகைய பாகுபாட்டுக்குட்படாவிட்டாலும் ஏனைய



மாணவர்களுக்கு நடப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா வாளா விருக்க அவரால் முடியவில்லை.

வெள்ளை நிற மாணவர்கள் (ஐரோப்பிய இனத்தவர்கள்) தான் இந்த விருப்பு வெறுப்புக்கு பெரும்பாலும் ஆளானார்கள் என்ற விடயம் பற்றி ஒபாமாவின் தந்தைக்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

இவ்வாறு கண்டனங்களை அள்ளி மென்மையாக வீசியபோதிலும் ஒரு நல்ல மகிழ்ச்சியான குறிப்போடு தன் நேர்காணலுக்கு முத்தாய்ப்பு வைக்கிறார்.

மற்றைய நாடுகள் ஹவாயிடமிருந்து கற்கவேண்டியது ஒன்றுண்டு. அதாவது எல்லா இன மக்களும் பொது நன்மைக்காக ஒன்றுபட்டு உழைக்கிறார்கள். மற்றைய இடங்களில் இதைக் காணமுடியாது. குறிப்பாக வெள்ளையர்கள் இப்படி ஒத்துழைக்க முன்வருவதில்லை.

ஒபாமா மேல் நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் போது தான் இந்த நேர்காணல் அடங்கிய வெட்டுத்துண்டைக் கண்டு பிடித்தார்.

அது அவரின் பிறப்புப் பத்திரத்தோடு மடித்து வைக்கப்பட்டிருந்தது. அது ஒரு சிறிய காகிதத் துண்டுதான். அதில் தந்தையின் படமும் இணைக்கப்பட்டிருந்தது. மனைவியைப் பற்றியோ அல்லது மகன் ஒபாமா பற்றியோ அதில் ஒரு வார்த்தையும் கூறப்படவில்லை. இத் தவறு தந்தையால் தன்னுடைய நீண்டகாலப் பிரிவை எதிர்பார்த்து வேண்டுமென்றே இழைக்கப்பட்டதா? என்பது புரியவில்லை.

ஒருவேளை பத்திரிகை நிருபர் தந்தையின் மேலாதிக்கச் செருக்கு நிறைந்த தொனியைக் கண்டு பயந்து போய் அவரின் தனி வாழ்வு பற்றிய வினாக்களை "நமக்கேன் இந்த வம்பு?" என்று கேட்காமல் தவிர்த்திருப்பாரோ?

அல்லது பத்திரிகையின் ஆசிரிய பீடம் தாங்கள் கூறவந்த கதைக்கு அது தேவையற்றது என்று விட்டிருப்பார்களோ?. இத் தவறு அம்மாவுக்கும் அப்பாவுக்கும் இடையில் சண்டை சச்சரவை உண்டாக்கியிருக்குமோ? இன்னோரன்ன வினாக்களுக்கு விடை காணமுடியவில்லை.

தனக்கென ஒரு தனி இனம் வேண்டுமென்றோ அல்லது தன்னுடன் சேர்ந்து வாழுகின்ற அப்பா கட்டாயம் இருந்திருக்க வேண்டுமென்றோ உணரக்கூடிய வயது ஒபாமாவுக்கு இன்னும் வரவில்லை. யாரும் நம்பமுடியாத மிகக் குறைந்த காலத்துக்குத் தான் அப்பாவும் அம்மாவும் ஒருவரையொருவர் வசீகரித்து காதல் எனும் மந்திர வயப்பட்டுக் கட்டுண்டிருந்தனர்.

ஜம்பொன்

அக்கட்டுக் குலைந்தது. அவர்கள் விட்டு வந்த வாழ்வு மீண்டும் அவர்களை தத்தம் பழைய வழிக்கு இழுத்துச் சென்றது. அப்போது ஒபாமாவுக்கு ஆறு வ்யதாகிவிட்டது.

அந்த ஆறு வருடங்களிலும் அவர்கள் கண்ட கனவுகளின் இடத்தை மகன் ஒபாமா நிறைத்துக் கொண்டார். (தொடரும்)

# உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துரைக்கும் அறிக்கைகளை வசைமாரி என்கிறார் கருணாநிதி

## அ.தி.மு.க.பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவிப்பு

(சென்னை)

எனது அறிக்கைகளை வசைமாரி பொழியும் அறிக்கைகள் என்றால் மூக்கறுந்து போன மூளி அலங்காரி, நாக்கறுந்து தொங்குகின்ற நரி, நாலாந்தரப் பெண், மகுடம் பறி கொடுத்த மாயராணி, செப்படி வித்தை மாமி, மலம், வேஷக்காரி, தெருப் பொறுக்கி, நாய்க்கொழுப்பு, பூதகி, நாய், திமிங்கலம் போன்ற வார்த்தைகள் இடம் பெற்றுள்ள கருணா நிதியின் அறிக்கைகளை என்ன என்று சொல் வது? என அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றம் சாட்டி அறிக்கை வெளி யிட்டுள்ளார்.


இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நான் ஏதோ வசை மாரி பொழிந்து அறிக்கைகள் வெளியிட்டதா கக் கூறி, எனது அறிக்கைகளில் உள்ள சில வார்த்தைகளைப் பட்டியலிட்டிருக்கிறார்.

அந்தப் பட்டியலில் உள்ள வார்த்தைகளைப் பார்க்கும்போது, அவை வசைமாரி பொழியும் அறிக்கைகள் அல்ல, உண்மை நிலையை நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்கும் அறிக்கைகள் என்பதை அறிவார்ந்த மக்கள் எளிதாக அறிந்துகொள்வார்கள்.

உதாரணமாக, கருணாநிதி பேச்சு மூச்சற்றுப் போவார், வாய் மூடிக்கிடப்பார் என்று 4.10.2008 அன்று நான் வெளியிட்ட அறிக்கையிலே குறிப்பிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார் கருணாநிதி.

அந்த அறிக்கையில், தமிழர்களின் நலன், பாதுகாப்பு, நல்வாழ்வு என்பன பற்றிய பேச்சு எழும்போதெல்லாம் கருணாநிதி பேச்சு, மூச்சற்றுப் போவார், வாய்மூடிக் கிடப்பார் என்றுதான் குறிப்பிட்டிருந்தேன்.



அண்டை மாநிலங்களுடனான நதி நீர்ப் பிரச்சினை, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, கச்சதீவு பிரச்சினை என்றால் வாய் மூடிக் கிடப்பார் என்று தான் இதற்குப் பொருள். இதுதான் உண்மை நிலை. இதில் தவறு ஒன்றும் இல்லை.

காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடக்கூட மத்திய அரசு முன்வரவில்லை. இதுகுறித்து மத்திய அரசிடம் கருணா நிதி வற்புறுத்தி இருப்பாரா?

அதனால்தான் இலங்கைத் தமிழர் கள் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டதைக் கூட்டுவதற் கான எந்தத் தார்மீக உரிமையும் கருணா நிதிக்கு இல்லை என்று தெரிவித்திருந்தேன். இதில் எந்தத் தவறும் இல்லை என்பதை தமிழக மக்கள் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

என்னுடைய 10.10.2008 ஆம் நாளிட்ட அறிக்கையில், உண்மையிலேயே தமிழர்கள் மீது கருணாநிதிக்கு அக்கறை இருக்குமானால், இலங்கை இராணுவத்திற்கு பயிற்சியளிக்கும் மத்திய அரசிற்கு தி.மு.க. அளித்து வரும் ஆதரவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

அப்படிச் செய்தால் தான் மத்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்பட முன் வரும் என்று தெரிவித்திருந்தேன்.

என்னுடைய கோரிக்கை ஏற்கப்பட்டிருக்குமேயானால், இந்த நேரத்தில் இலங்கையில் நிச்சயமாகப் போர்நிறுத்தம் ஏற்பட்டிருக்கும். தமிழினப் படுகொலை தடுத்து நிறுத்தப்பட்டிருக்கும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.(ஓ-5)

## நடிகர் ஜெயம்ரவி–ஆர்த்தி திருமணம் ஜூன் 4ஆம் திகதி



நடிகர் ஜெயம் ரவிக்கும், பட அதிபர் சுஜாதா விஜயகுமாரின் மகள் ஆர்த்திக்கும் சென் னையில் எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம்திகதி திருமணம் நடக்க வுள்ளது.

நடிகர் ஜெயம் ரவிக்கும், பட அதிபர் விஜயகுமார்–சுஜாதா விஜயகுமார் தம்பதிகளின் மகள்ஆர்த்திக்கும் இடையே காதல் மலர்ந்தது. இருவரும் திருமணம் செய்துகொள்ள விரும்பினார்கள். இந்தத் திருமணத்துக்கு பெற்றோர்களும் சம்மதம் தெரிவித்தார்கள்.

இதைத்தொடர்ந்து, ஜெயம் ரவிக்கும், ஆர்த்திக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அதன்படி, இவர்களது திருமணம் வருகிற ஜூன் மாதம் 4 ஆம் திகதி சென்னையில் நடக்கிறது. திருமண வரவேற்பு நிகழ்ச்சி ஜூன் 7 ஆம் திகதி மாலை 6.30மணிக்கு சென்னையில் உள்ள மேயர் ராமநாதன் செட்டியார் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. (ஓ-6)

## இலங்கை நிவாரண நிதிக்கு தமிழக அரசு ரூ. 50 கோடியே 53 இலட்சம் நிதி திரட்டல்

இலங்கையில் வடக்கில் தமிழ் மக்களிற்கு நிவாரணம் வழங்குவதற்கு தமிழக அரச சார்பில் ஐம்பதுகோடியே ஐம்பத்து மூன்று இலட் சம் நிதி திரட்டப்பட்டுள்ளதாக தமிழக அரசு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் இதுவரை பத்து கோடி ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கென சேகரிக்கப்பட்டுள்ள ஏனைய நிவாரணப் பொருட்களையும் இலங்கைக்கு அனுப்புமாறு தமிழக முதலைமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-14)

## ஐரோ.பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு, திருமதி பயன்படுத்த தடை

(லண்டன்)

ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு, திருமதி உள்ளிட்ட பல வார்த்தைகளைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆண், பெண் பேதத்தைப் பிரதிபலிக்கும் இந்த வார்த்தைகளை இனிமேல் உறுப்பினர்கள் பயன்படுத்தக்கூடாது என உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சம பாலின மொழி என்ற தலைப்பில் கையேடு ஒன்றை ஐரோப்பிய நாடாளுமன்றம் வெளியிட்டுள்ளது. அதில், பெண் உறுப்பினர்களை முழுப் பெயரையும் சொல்லித்தான் அழைக்கவேண்டும் என் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், 'Sportsmen' என்ற வார்த்தைக்குப் பதில் இனிமேல், 'athletes' என்று அழைக்கவேண்டும். அதேபோல அரசியல் வாதிகளை குறிப்பிடுவதாக இருந்தால், 'statesmen' என்ற வார்த்தைக்குப் பதில் 'Political leaders' எனக் கூப்பிட வேண்டுமாம்.

அதேபோல'man-made' என்ற பதத்திற்குப் பதில் 'sportsmen' அல்லது 'synthetic' என்று கூறவேண்டும்.

அதுமட்டுமல்லாமல், fireman, airhostess, headmaster, policeman, salesman, manageress, cinema usherette, male nurse ஆகிய பதங்களைப் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால்'waiter', 'waitress' ஆகிய பதங்களுக்குப் பொதுவான வார்த்தை இந்த கையேட்டில் பரிந்துரைக்கப்படவில்லை.

பிரஸ்ஸல்ஸ் மற்றும் ஸ்டிராஸ்பர்க் நகரங்களில் நடந்த நிகழ்ச்சியில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 785 உறுப்பினர்களுக்கும் இந்தக் கையேட்டை, நாடாளுமன்ற செயலாளர் ஹரோல்ட் ரோமர் வழங்கினார். இந்தப் புதிய உத்தரவுக்கு ஸ்கொட்லாந் தைச் சேர்ந்த கன்சர்வேட்டிவ் கட்சியின் எம்.பி. ஸ்டுருவான் ஸ்டீவன்சன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எங்களது பாஷை ஆங்கிலம். அதில் எந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று எங்களுக்கே கற்றுத் தருகிறார்கள். இது முட்டாள்தனமாக இருக்கிறது என்றார்.

அதேபோல பிலிப் பிராட்பார்ன் என்ற எம்.பி, மக்களின் வரிப்பணத்தை வீணடித்து விட்டனர். எனது மொழியை எனது இஷ்டப்படி தான் நான் பேசுவேன். இதில் உள்ள ஒரு மாற்றத்தைக் கூட நான் பின்பற்றமாட்டேன். எனது மொழியை எப்படிப் பேசவேண்டும் என எனக்கு யாரும் ஆலோசனை சொல்ல முடியாது என்றார் காட்டமாக.

இதைவிட முக்கியமாக மேடம் என்ற சொல்லைப் பயன்படுத்தவும் இந்தக் கையேடு தடைசெய்கிறது. (ஓ-5)

## பாப்பரசர் முதல் தடவையாக ஆபிரிக்க கண்டத்திற்கு விஜயம்

பாப்பரசர் 16 ஆவது ஆசீர்வாதப்பர் ஆபிரிக்க நாடுகளுக்கான தனது முதலாவது பயணத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை ஆரம்பித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடி, சமாதானம் மற்றும் மீள் நட்புணர்வை ஊக்குவிப்பதற்கான அழுத்தம், ஊழல்களின் பாதிப்பு என்பவற்றில் சிக்கியுள்ள மேற்படி பிராந்தியத்துக்கு தனது ஆதரவைத் தெரிவிக்கும் வகையிலேயே அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




இந்நிலையில், தனது ஆபிரிக்க விஜயத்தின் முதல் கட்டமாக கமெரூனுக்குச் சென்று முஸ்லிம் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதுடன், அங்குள்ள பேராயர்களின் கூட்டமொன்றிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

அதைத்தொடர்ந்து, இவ் வார இறுதியில் அங்கோலாவுக்கான பயணத்தை அவர் மேற்கொள்ளவுள்ளார்.

ஆபிரிக்க நாடுகளில் மோதல்களும் அரசியல் நெருக்கடிகளும் அதிகரித்துள்ள நிலையில், பாப்பரசர் அந் நாடுகளில் சமாதா னத்தையும் மீள் நட்புணர்வையும் ஊக்குவிப் பதில் இவ் விஜயத்தின் போது முக்கிய கவனம் செலுத்துவார்' எனக் கூறப்படுகிறது. (ஓ-5)

## விண்வெளி மையத்துடன் டிஸ்கவரி ஓடம் இணைந்தது

(புளோரிடா)

விண்வெளியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விண்வெளி மையத்துக்கு தேவையான பொருட்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்காவில் இருந்து டிஸ்கவரி விண்வெளி ஓடம் நேற்றுமுன்தினம் புறப்பட்டது.

நேற்று சர்வதேச விண்வெளி மையத்தை நெருங்கிய டிஸ்கவரி ஓடம் இந்திய நேரப்படி நேற்று அதிகாலை விண்வெளி மையத்தோடு இணைந்தது.

அதில் இருந்த 7 விஞ்ஞானிகளும் டிஸ்கவரி ஓடத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்துக்குள் இறங்கினார்கள். அவர்களை அங்கு ஏற்கனவே தங்கியிருந்த விஞ்ஞானிகள் வரவேற்றனர்.

விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் சூரிய சக்தி மின் நிலையத்துக்கான கருவிகளை எடுத்துச் சென்றுள்ளனர். அவற்றை அதில் பொருத்த உள்ளனர். வேறு சில பணிகளும் உள்ளன. 8 நாட்களும் அங்கேயே தங்கியிருந்த இந்தப் பணிகளைச் செய்கின்றனர். அதன் பிறகு மீண்டும் டிஸ்கவரி ஓடத்துக்கு வரும் அவர்கள் அங்கிருந்து பூமிக்கு திரும்பவுள்ளனர். (ஓ-5)

## பங்களாதேஷில் செயற்பட்டுவரும் 12 பயங்கரவாத அமைப்புகளுக்கு தடை

(டாக்கா)

பங்களாதேஷில் தடைசெய்யப்பட்டுள்ள 12 பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலை அந்நாட்டு உள்துறை அமைச்சகம் நேற்று முன்தினம் வெளியிட்டது. பங்களாதேஷில் கடந்த மாதம் துணை இராணுவப் படையினரால் கலவரம் ஏற்பட்டது. பாதுகாப்பு அதிகாரிகள் பலர் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர். இந்தக் கலவரம் குறித்த விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

பங்களாதேஷ் வர்த்தகத்துறை அமைச்சர் கர்னர் பரூக் கான் தலைமையில் விசாரணை நடந்தது. ஜமாத்துல் முஜாகிதீன், ஹர்கத்துல் ஜிகாத் அல் இஸ்லாம் உட்பட சில அமைப்புகள் இந்தக் கலவரத்துக்கு உடந்தையாக இருந்ததாக விசாரணை குழு சந்தேகிக்கிறது.

இதையடுத்து, பங்களாதேஷில் செயல்பட்டு வரும் 12 பயங்கரவாத அமைப்புக்களை தடைசெய்து அந்நாட்டு உள்துறை அமைச்சகம் பட்டியல் வெளியிட்டுள்ளது.

இனி இந்த அமைப்புக்களின் செயல்பாடுகளை தீவிரமாகக் கண்காணிக்கவும், இவைகளுக்கு கிடைக்கும் நிதி ஆதாரங்களை பற்றி விசாரிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜாக்ரதா முஸ்லிம் ஜனதா பங்களாதேஷ் உள்ளிட்ட நான்கு பயங்கரவாத அமைப்புகள் ஏற்கனவே தடைசெய்யப்பட்டுள்ளன. இந்த அமைப்புகள் பெயர்களை மாற்றிக் கொண்டு வேறு பெயரில் செயல்பட்டு வந்தன. பயங்கரவாதிகளின் தாக்குதல் முயற்சியில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஏற்கனவே இரண்டுமுறை தப்பியுள்ளார்.

இதையடுத்து, பயங்கரவாத அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டுள்ளார். (ஓ-5)

## மஹா கும்பாபிஷேகம்

(உரும்பிராய்)

உரும்பிராய் வடக்கு நாச்சிமார் அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.28 மணி முதல் 11.18 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் ஆரம்ப கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 10 நாட்கள் மண்டலாபிஷேகம் காலை 8.30 மணி முதல் நடைபெற்று ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி நாச்சிமார் அம்மனுக்கும் ஏனைய பரிபாலன மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேக தினத்தன்று ஆலயத் தொண்டர் சபையினால் நடத்தப்படும் ஆலய கட்டட நிதிக்கான அதிர்ஷ்டஇலாபச் சீட்டிழுப்பு மாலை 4 மணியளவில் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஓ)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "தேவி பாகவதம்" எனும் தொடர் யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

♦♦♦

(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக சொற்பொழிவுத் தொடரில் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் "கீதை காட்டிய பாதை" என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சி.வேலாயுதம் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுநாள் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற உள்ளதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி சங்கச் செயலாளர் மு.காசித்தம்பி அறிவித்துள்ளார். (ஓ-29)

♦♦♦

(வடமராட்சி)

பருத்தித்துறை புலோலி மத்தியில் சதாவதானி அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-10)

# வடக்கின் கரையோரப் பிரதேசங்களில் நெக்டெப்பின் அபிவிருத்திப் பணிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் கரையோரக் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு உருவாக்கப்பட்ட நெக்டெப்பின் அபிவிருத்திப் பணிகள் வடக்கின் கரையோரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத் திட்டத்திற்கு அமைவாக வடக்கின் கரையோரப் பிரதேசங்களில் இருந்து 100 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்காக ஆசிய அபிவிருத் வங்கியால் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் 3 தொடக்கம் 5 வருடங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ்.மாவடத்தின் கிழக்கு கரையோரப் பிரதேசங்களான வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவு மற்றும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய 32 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளபோதும் வடக்கின் கரையோரக் கிராமங்களை கட்டியெழுப்பும் வகையில் இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் அளவில் நெக்டெப்பின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.


மேற்படி திட்டத்தின் அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் அதிகாரிகள் ஏப்ரல் மாதம் அளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் வடக்கு கரையோரப் பிரதேசங்களை துரித கதியில் அபிவிருத்தி செய்யும் நோக்கோடு இத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் வடக்கின் கரையோர மக்களின் வாழ்வாதாரத்தை துரிதகதியில் விருத்தி செய்வதற்கான அடிப்படை சமூக கட்டுமானங்கள் சமூக பொது வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்தல், இயற்கை வளங்களை பொருத்தமான முறையில் முகாமை செய்தல் போன்ற அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த கால யுத்த சூழல்களின்ால் அழிக்கப்பட்டு மீளக் கட்டியமைக்கப்படாத மீனவத் தொழிற்சாலைகள் புனரமைக்கப்பட்டு மீளக் கட்டியெழுப்பி வடக்கின் கரையோர மக்களின் மீனவத் தொழிலை விருத்தி செய்யும் முகமாக மக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக தொழில்சார் பயிற்சிநெறிகள் வழங்கப்படவுள்ளதாகவும் நெக்டெப்பின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ஓ-7)




# வட்டு. ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலைய திறப்புவிழா

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை விளாத்தோட்ட ஒழுங்கை மூளாய் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு நிலைய திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வட்டுக்கோட்டை ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி ரேணுகா கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விரந்தினர்களாக வடமாகாண சுகாதார சேவை அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ. ஞானசோதி, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் வடமாகாண கட்டடத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பிரதம பொறியியலாளர் கு. குகநேசன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வலி - மேற்கு பிரதேச செயலர் திருமதி. தேவேந்தினி பாபு, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி டினேஷ் ஜெயக்குமார், சுழிபுரம் வலி. மேற்கு பிரதேச சபை செயலாளர் சு. புத்திசிகாமணி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத்திறப்பு விழாவில் பெயர்ப்பலகை திரைநீக்கம், மருத்துவ நிலையம் திறப்பு, கல்வெட்டு திரைநீக்கம், அறப்பணி செய்தோர் விபரக்கல் திரைநீக்கம், அத்திவார திறப்பு நாள் பற்றிய செய்திக் கல் திரைநீக்கம், வைத்தியசாலைப் பணிமனை திறப்பு போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஓ-27)

## கொடிகாமம் ப.நோ.கூ.சங்கத்தின் விசேட விற்பனை நிலையம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தினர் நாவலடியில் விசேட விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து கொடிகாமம் நாவலடியில் தங்கியுள்ள பொது மக்களது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. இங்கு அத்தியாவசியப் பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம் என்று பொது முகாமையாளர் எஸ். தேவகுமார் தெரிவித்தார். (ஓ-29)





அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் சிறப்பு விருந்தினர் எஸ்.விக்னேஸ்வரராஜா, அதிபர் வே.பாலசுப்பிரமணியம் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் பெண்க்ள் அணிகள் பங்குபற்றும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டிகள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 4 மணிவரை சுதுமலை ஐங்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் வி.க, மயிலிட்டி நியுகிற் வி.க, சண்டிலிப்பாய் ஸ்ரீ அம்பாள் வி.க, மயிலிட்டி ஒற்றுமை வி.க, இணுவில் அண்ணா வி.க,அளவெட்டி பாரதி வி.க., சுன்னாகம் யுதிஸ்ரார் வி.க, பண்டத்தரிப்பு ஐக்கிய வி.க, அளவெட்டி உதயதாரகை வி.க ஆகிய கழகங்களைச் சேர்ந்த பெண்கள் அணிகள் பங்குபற்றவுள்ளன. (ஓ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறும் என தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)

## மனை முகாமைத்துவ பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய முறைசாரக் கல்விப் பிரிவினரின் ஏற்பாட்டில் யுவதிகளுக்கான மனை முகாமைத்துவப் பயிற்சிநெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் மாதர் அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி நவநீதன் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு. இராசநாயகம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐங்கரன்வேல், கிராமசேவையாளர் ஜே/108 திருமதி இராகினி, முறைசார இணைப்பாளர் கவீந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ)

## கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் திக்கம் இளைஞர் வி.க சம்பியன்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் வி.க சம்பியனானது.

இவ் இறுதியாட்டத்தில் திக்கம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு வி.க மோதியதில் 2-0 என்ற கோல் கணக்கில் திக்கம் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (ஓ-10)

## வலிமேற்கு பிரதேச செயலக தடகளப் போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

வலிமேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையேயான தடகளப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும், நாளை மறுநாள் சனிக்கிழமையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகளுக்கு வீர, வீராங்கனைகளை குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது சமுகமளிக்குமாறு வலிமேற்கு பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (ஓ-27)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 17,19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெற்றது. (ஓ-27)

# முல்லைத்தீவில் சுத்தமான நீருக்கு தட்டுப்பாடு

# தொற்று நோய் பரவும் அபாயமும் அதிகரிப்பு

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கை

(கொழும்பு)

முல் லைத்தீவில் இராணுவக் கட்டுப்பாடு ற்ற பகுதியில் சுத்தமான நீருக்குத் த ட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் தொற் று நோய்கள் பரவும் அபாயமும் அதிகரித்துள்ளது என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி. ஆர் .சி) நேற்று முன்தினம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப்பகுதி மக்கள் அகழியில் பாதுகாப்புத் தேடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மருந்துப் பொருட்களுக்கும் இங்கு தட்டுப்பாடு நிலவுகின்றது என்றும் அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் தொடரும் இவ்வேளையில், மோதல் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களின் உயிருக்கு ஏற்படக்கூடிய அச்சம் அதிகரிக்கிறது.

காயமடைந்த மற்றும் நோயாளிகளை வெளியேற்றவும் உணவு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மருந்துத் தொகுதியை எடுத்து செல்ல வழித்துணை வழங்குவதன் மூலம் சர்வதேச செஞ்சிலுவைக் குழு (ஐ.சி. ஆர்.சி) சிறிதளவு நம்பிக்கையை ஏற்படுத்த வழிவகுக்கிறது.

துரிதமாக குறைவடையும் நிலப்பரப்பில் முடக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் மோதலிலிருந்து விடுபடவும் பாதுகாப்பு, உணவு மற்றும் மருந்து உதவிகளையும் நாடி இவர்கள் கரையோர பகுதிக்கு நகருகிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கரையோர பகுதிகளில் மக்களின் எண்ணிக்கை கடந்த வாரங்களில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தும், சுத்தமான நீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் சனநெருக்கம் நீர் மற்றும் சுகாதார குறைபாடு காரணமாக இப்பகுதி மக்கள் தொற்று நோய் ஆபத்தை எதிர்கொள்கிறார்கள். இப்பிரதேசம் நாளாந்தம் ஷெல் வீச்சுக்கு உள்ளாகின்றது.

மனிதாபிமான நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என ஐ.சி.ஆர்.சியின் கொழும்பு குழுவின் தலைவர் போல் கஸ்ரல்லா கூறுகிறார். அநேகமாக இம்மக்கள் அகழிகளில் பாதுகாப்பு தேடும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். அவர்கள் குறிப்பிடத்தக்க உடல் ரீதியான அபாய நிலையை எதிர்கொண்டுள்ளார்கள். வார, மாதக் கணக்கில் திரளாக பல இடங்களுக்கு நகரத் தள்ளப்பட்ட இம்மக்கள், தங்களது முழு உணவுக்ும் மோதல் பகுதிக்கு வெளியே உள்ள பிரதேசத்திலிருந்து பெறுவதில் தான் தங்கியுள்ளனர்.

புதுமாத்தளன் பகுதிக்கு தொடர்ந்து வரும் காயமடைந்த மற்றும் நோயாளிக்கு உள்ளூர் வாசிகள் பாடசாலை, சனசமூக நிலையம் போன்றவற்றில் தற்காலிகமாக மருத்துவ நிலையங்களை ஏற்படுத்த உதவுகிறார்கள்.

சுகாதார அமைச்சின் பணியாளர்கள் சிறந்த வைத்திய உதவிகளை தொடர்ச்சியாக பெரும் எண்ணிக்கையில் வருகை தரும் மக்களுக்கு வழங்குகிறார்கள். ஆனால், வருத்தப்படும் அளவுக்கு மருந்துப் பொருட்களுக்கு பற்றாக்குறை காணப்படுகின்றது.

அரசினதும் விடுதலைப் புலிகளினதும் இணக்கப்பாட்டுடன் ஐ.சி. ஆர்.சி தொடர்ந்தும் நோயாளிகளை புதுமாத்தளனிலிருந்து (விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம்) திருகோணமலைக்கு (அரச கட்டுப்பாட்டு பிரதேசம்) வெளியேற்றுகிறது. வெளியேற்றம் தொடங்கிய பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் ஐ.சி. ஆர்.சி வாடகைக்கு அமர்த்திய கிரீன் ஓசன் என்ற கப்பல் மூலம் நோயாளர்கள், காயமடைந்தோர், உதவியாளர்கள் உட்பட 4 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் ஆயிரத்து 400 பேருக்கு சத்திரசிகிச்சை தேவைப்படுவதால் சத்திரசிகிச்சை நிபுணர், மயக்க மருந்து நிபுணர், தாதி அடங்கிய ஐ.சி.ஆர்.சி. மருத்துவ குழு திருகோணமலை வைத்தியசாலை நிர்வாகத்திற்கு உதவுகிறது.

அரசினாலும் உலக உணவுத் திட்டத்தாலும் வழங்கப்பட்ட மா, பருப்பு, சீனி, எண்ணெய் போன்றவற்றை உள்ளடக்கிய 700 தொன் உணவுப் பொருட்களை திருகோணமலையிலிருந்து புதுமாத்தளனுக்கு அனுப்ப பெப்ரவரி நடுப்பகுதியிலிருந்து ஐ.சி.ஆர்.சி 12 தடவைகள் கப்பல்களுக்கு வழித்துணை வழங்கியது. மூன்று தடவைகள் சுகாதார அமைச்சின் மருந்துப் பொருட்களை வழங்க முடியுமாய் இருந்தது. ஆனால், அவற்றின் அதிகரித்துக் காணப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்வதில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

செயல்குன்றிய புதுமாத்தளன் வைத்தியசாலைக்கு நோயாளிகள் தொடர்ந்தும் வருகை தருவதால் இவர்களை கிரமமாக எதுவித தடையுமின்றி அப்புறப்படுத்துவது முக்கியமாகும். உணவு, மருந்துப் பொருட்கள் மோதல் பகுதிக்கு கொண்டு செல்வது வரவேற்கக் கூடியதாக இருந்தாலும் கிரமமாக இவைகளைக் வழங்குவதனால் தான் உண்மையான பலனைப் பெற முடியும் என இலங்கையில் ஐ.சி. ஆர்.சியின் சுகாதார நடவடிக்கைகள் இணைப்பதிகாரி மோவன் மேகிசன் கூறுகிறார்.

உள்ளூர் வாசிகளைப் போல் சிவில் மற்றும் இராணுவ அமைப்புக்கள் மக்களை மருத்துவ சிகிச்சைக்காக வெளியேற்றுவதற்கும் கப்பலில் உணவை ஏற்றி இறக்கவும் உதவுகின்றனர். புதுமாத்தளன் கரையிலிருந்து உணவுப் பொருட்களை கப்பலில் இருந்து இறக்கி கரைக்கு மீன்பிடி வள்ளங்களில் கொண்டு செல்வதற்கு 275 பேர் தேவைப்படுகிறார்கள். இது ஆபத்து நிறைந்ததும் சிக்கலுமான விடயம். யுத்தம் ஒருபுறம், சீரற்ற காலநிலை மற்றும் கடல் கொந்தளிப்பு போன்றவை இதை மேலும் சிக்கலாக்குகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் ஐ.சி.ஆர்.சி நோயுற்று காயமடைந்து வெளியேற்றப்பட்டு திருகோணமலை மற்றும் வவுனியா வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களுக்கு சுகாதார பொருட்கள் தொகுதி, அவசர தேவைக்கான வீட்டுப் பாவனைக்கான பொருட்கள், சமையலறை பொருட்கள், குழந்தைப் பராமரிப்பு பொருட்கள் போன்றவற்றை அளித்தது. (ஓ-5)

# பாராளுமன்றத்திற்கு விரைவில் புதிய கணக்காய்வு சட்டமூலம்

## கணக்காய்வாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய கணக்காய்வு சட்டமூலம் ஒன்றை விரைவில் கொண்டுவரவுள்ளோம். இது தொடர்பான நகல் சட்ட மூலம் தற்போது சட்ட வரைபு திணைக்களத்தின் பரிசீலனையில் உள்ளது. விரைவில்' சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு வரும் என்று கணக்காய்வாளர் நாயகம் எஸ். சுவர்ணஜோதி தெரிவித்தார். கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தற்போது நடைமுறையில் இருக்கின்ற கணக்காய்வு சட்டமூலத்தில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அதில் பல திருத்தங்களைச் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, புதிய கணக்காய்வு சட்ட மூலம் ஒன்றைக் கொண்டுவரவுள்ளோம். நகல் சட்டமூலம் தாயரிக்கப்பட்டுள்ளது. அது தற்போது சட்ட வரைவு திணைக்களத்தின் பரிசீலணையில் உள்ளது. அந்தத் திணைக்களத்தின் பரிசீலணையின் பின்னர் சட்ட மூலம் அமைச்சரவையின் அனுமதிக்கு வழங்கப்படும் அதனையடுத்து அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

இந்தப் புதிய சட்டமூலம் பாராளுமன்றத்தில் அனைவரினதும் ஒத்துழைப்புடனும் நிறைவேறும் என எதிர்பார்க்கின்றேன். அதில் சில அதிகாரங்களைப் பெற வேண்டியுள்ளது. தற்போதைய நிலையில் நான் வருடம் தோறும் அறிக்கைகளை மட்டுமே வெளியிட்டுக் கொண்டிருக்கின்றேன். ஆனால், கணக்கியல் செயற்பாடுகளில் பொருத்தப்பாடுகள் காணப்படாத நிறுவனங்கள் தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பின்பற்றப்படும் முறைமைகளை ஒரே நாளில் மாற்றியமைக்க முடியாது. ஆட்சேர்ப்பு விடயத்தில் கூட எங்களுக்கு முழுமையான அதிகாரம் வழங்கப்படவில்லை. 2008 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைகளின் பெறுபேறுகளுக்கு அமைய இது வரை ஆட்சேர்ப்புச் செய்யவில்லை. விமர்சனங்கள் இருக்கவேண்டும். ஆனால் அவை ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டும்.

கணக்காய்வு சபை மற்றும் கணக்காய்வு ஆணைக்குழு என்பன மிகவும் சுயாதீனமாக இயங்க வேண்டும். (ஓ-6-5)

# பொது தொல்லை பற்றி பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டியவை

ஒரு மனிதன் தனது சொத்தினை நியாய மற்ற வகையிலும் தேவையற்ற வகையிலும் அவனுடைய அயலவர்களுக்கு வசதி குறைவை ஏற்படுத்தும் வகையில் பாவித்தலே தொல்லை என சல்மண்ட் என்கின்ற சட்டவியலாளர் கூறுகின்றார். குறிப்பிட்ட தொகுதியில் சராசரி ஆட்களுக்கு இவ்வாறு வசதி குறைவு ஏற்படும் போது அது தொல்லையாக இனங்காணப்படுகின்றது. தனிப்பட்ட.தொல்லை என்பது குடியிருப்பாளர் ஒருவர் தனது ஆதனத்தை பிறழ்வான முறையிலும் முறையற்ற வகையிலும் தனது அயலவருக்கு இடையூறு ஏற்படும் வகையில் பயன்படுத்தலின் போது ஏற்படுகின்றது.

வின்பீல்ட் என்கின்ற சட்டவாளருடைய கருத்துப்படி தொல்லை எனப்படுவது தீங்கியல் சட்டத்தின் ஒரு பிரிவு என்றும் சூழல் பாதுகாப்புடன் நெருங்கிய சம்பந்தம் கொண்டது என்றும் தொல்லை என்னும் பதத்தை விவரிக்கின்றார். தீங்கு ஏற்படுத்தக்கூடிய தூமங்கள், எண்ணெயில் ஏற்படும் மாசடைதல், தொழிற்சாலையினால் வெளிவரும் இரைச்சல், பிரதான பொதுசனம் பாவிக்கும் பெருந் தெருக்களை இடையூறு செய்தல் போன்றவற்றை தொல்லைகளாகக் கருத முடியும்.

சூழற் பாதிப்பை கட்டுப்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நியதிச் சட்ட அதிகாரங்களின் படி சில செயல்களைச் செய்வது தொல்லைகளாக இனங்காணப்பட்ட போதும் சில செயல்களை செய்யாமல் விடுவதும் தொல்லைகளாக சட்டத்தின் கண்களில் கணிக்கப்படுகின்றது. தொல்லை எனப்படுவதும் ஒரு சார்புத் தன்மை கொண்ட சொற் தொடர் என்பதுடன் சூழலில் உள்ள மக்களின் விருப்பு வெறுப்புக்கள் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரம் என்பவற்றை கொண்டு நிர்ணயிக்கப்படுகின்ற தன்மை வாய்ந்தனவாகும்.

காணிச் சொந்தக்காரர் ஒருவருடைய செயல், செய்யாமை என்பவற்றுடனும் அயலவர்களுடைய பாதிக்கப்படுகின்ற தன்மையாலும் இது தீர்மானிக்கப்படுகின்றது. தொல்லை எனப்படுவது காணியின் பௌதீக தன்மையோடு ஏற்படுகின்ற இழப்பீடுகளை மட்டுமின்றி ஏற்படுத்தப்படுகின்ற வசதிக் குறைவுகளையும் உள்ளடக்கும். உதாரணமாக நீர், புகை, மணம், தூமம், வாயுக்கள், சத்தம், வெப்பம், அதிர்வு, மின்சாரம், தாவர விலங்குகள் என்பவற்றினால் ஏற்படுத்துகின்ற வசதியின்மைகளையும் உள்ளடக்கும்.

தனிப்பட்ட தொல்லை தொடர்பான நிவாரணம் சிவில் சட்டத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற ஊறுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும். மாவட்ட நீதிமன்ற தனிப்பட்ட தொல்லை தொடர்பில் நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்று என்பதுடன் நட்ட ஈடுகளைப் பெற்று இதற்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், பொதுத் தொல்லை எனப்படுவது ஒரு குற்றவியல் தவறொன்றாகும். இதற் கான நிவாரணம் குற்றவியல் நடவடிக்கை சட்டக் கோவையிலும் தண்டனைச் சட்டக் கோவையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் சட்ட ரீதியற்ற வகையில் ஒரு செயலை செய்வதன் காரணமாகவும் சட்ட ரீதியாகச் செய்ய வேண்டிய செயலை செய்யாமையினாலே ஏற்படுகின்ற பொதுவான ஊறுகள், ஆபத்து, தொந்தரவு என்பவற்றை குறிப்பிடலாம். பல அதிகார சபைகளும் நிறுவனங் களும் நியதிச் சட்டத்தை மீறுகின்ற குற்றத் தவறாளர்களுக்கு எதிராக வழக்கிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் உள் ளூராட்சி அமைப்புக்கள் பொதுச் சுகாதார தொல்லை தவிர்ப்பு மாசடைதலில் இருந்து பாதுகாத்தல் போன்ற விடயங்களுக்காக வழக்கிடுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட் டுள்ள நிறுவனங்களாகும்.

உள்ளூர் அதிகார சபைகளிடம் வேறு நியதிச்சட்டங்களும் அதிகாரங்களை சூழல் பாதுகாப்பும் தொல்லைத் தவிர்த்தல் தொடர்பில் வழங்கியுள்ளன. அத்தகைய நியதிச் சட்டங்களான நாடு நகர நிர்மாணக் கட்டளைச்சட்டம், நாடு நகர திட்டமிடல் கட்டளைச் சட்டம், பெருந் தெருக்கள் சட்டம், உள்ளூர் அதிகார சபைச் சட்டம், கிணறு குழிகள் சட்டம், சுடுகாடு தொடர்பான சட்டம், உணவுச் சட்டம், நாய்கள் பதிவுச் சட்டம், விசர் நாய் தடுப்புச் சட்டம், விலங்குகள் சட்டம் போன்ற சட்டங்களைக் குறிப்பிடலாம்.

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க சூழல் பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகார சபை பல அதிகாரங்களை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கூட்டிணைப்பு நோக்குடனும் கண்காணிப்பு நோக்குடனும் தத்தமது பிரதேசங்களின் தொல்லைகளை கட்டுப்படுத்தல்

**சட்டத்தரணி தி. திருச்செந்தில்நாதன்**

தொடர்பில் உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கியுள்ளன. பொலிஸ் கட்டளைச் சட்டமும் தொல்லைகள் சட்டமும் இவ்வாறே சிவில் அதிகாரங்களை உள்ளூர் அதிகார சபைகளுக்கு வழங்கியுள்ளன. (தொடரும்)

ஒருநாட்டில் அறிவு இருக்கவேண்டிய இடத்தில் அதிகாரம் அமரத்தொடங்கினால், அதன்பிறகு அது முன்னால் வந்து அந்த நாட்டை படுகுழிக்கு இழுத்துச் சென்றுவிடும். ~ இங்கர்சால்

வலம்புரி

# இலங்கை அரசுக்கு நவநீதம்பிள்ளை யார்?

ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை வன்னி நிலைவரம் தொடர்பில் விடுத்த அறிக்கை தவறானது என இலங்கை அரசு கூறியுள்ளது.

அறிக்கையொன்றை வெளியிடும்போது அதனை மறுக்கும் உரிமை எவருக்கும் உண்டு.

அவ்வகையில் இலங்கை அரசு தனது மறுப்பை தெரிவித்தமை விவாதத்திற்குரிய விடயமன்று.

அதேநேரம் இலங்கை அரசு ஐ.நாவின் அறிக்கையை மறுத்துவிட்டதென்பதற்காக அந்த அறிக்கை செல்லுபடியற்றதாக இருந்து விடாது.

மறுப்புகளுக்கு மத்தியில் உண்மைகள் கண்டறியப்படும். இதுவே வழமை. ஆனால் ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் விடுத்த அறிக்கையை தவறானதென மறுப்பதற்கு மேலாக நவநீதம்பிள்ளை தொடர்பில் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு முன்வைப்பது நாகரிகமான செயலன்று.

எதற்கெடுத்தாலும் எப்படியும் கதைக்கலாம் என்ற சிறுமைத்தனம் சாதாரண மனிதர்களிடம் இருப்பது போல ஆபத்தானதாக இருக்கும் போது, ஒரு அரசிடம் இருப்பது எத்துணை ஆபத்தானதென்பதை புரிந்து கொள்வதில் கடினம் இருக்காது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை நவநீதம்பிள்ளை தமிழ்ப்பெண்ணாகத் தென்படுகிறாரே தவிரஅவரை ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளராக இலங்கை அரசு நோக்கவில்லை என்பது தெளிவாகிறது.

ஆக, இலங்கை அரசு ஈழத்தமிழர்களை மட்டுமன்றி உலகில் தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களை எதிர்ப்பதே தனது முக்கிய பணி என்று கருதுகிறது போலும்.

வன்னி நிலைவரம் தொடர்பில் ஐ.நா. விடுத்த அறிக்கை நவநீதம்பிள்ளையின் தனிப்பட்ட அறிக்கையன்று. அது ஐ.நா. சபையின் அறிக்கை.

ஐ.நா. சபை விடுத்த அறிக்கைக்கு உரிய மதிப்பை வழங்குவது இலங்கை அரசின் கடமையாகும்.

இதை விடுத்து எழுந்தமானமாக –அவர் தமிழினத்தவர் என்பதற்காக எப்படியும் கதைக்கலாம் என நினைப்பதானது இலங்கையில் கல்வி அறிவு வீதம் தொடர்பில் மீள் மதிப்பீடு செய்யவேண்டியதொரு தேவையை உருவாக்கி விடும்.

எனவே இலங்கை அரசு தனது 'மறுப்பு' நடவடிக்கையின்போது இனத்துவப் போக்கை கடைப்பிடிப்பதை கைவிட்டு ஆதாரபூர்வமாக மறுப்பைத் தெரிவிப்பதே இலங்கைக்கு அழகாகும்.

# அரிசி வகைகளின் விலைகளை குறைக்க அரசாங்கம் திட்டம்

சிங்கள–தமிழ் புத்தாண்டுக்கு முன் அரிசி விலையை மேலும் குறைக்க திட்டமிட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். சம்பா அரிசி 70 ரூபாய் எனவும் நாடு மற்றும் பச்சையரிசி விலைகள் 65 ரூபாய் எனவும் உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர் இதனை மேலும் குறைப்பது தொடர்பாக உணவு பாதுகாப்பு தொடர்பான அமைச் சரவை உபகுழுவுக்கு ஆலோசனை முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை நுகர்வோர் கூட்டுறவுத்துறை தொடர்பான சர்வதேச மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமானது. இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த மாநாட்டில் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேசங்களில் இருந்தும் கூட்டுறவுத்துறை சார் உயர் அதிகாரிகள், சர்வதேச கூட்டுறவு சங்கத் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறியதாவது;

சிங்கள–தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக அரிசி விலைகளை உயர்த்த சில வர்த்தகர்கள் தயாராகின்றனர். ஆனால் புத்தாண்டுக்கு முன்பாக அரிசிவிலையை மேலும் குறைக்கவே அரசு திட்டமிட்டுள்ளது. அரிசிப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் தலையிட்டிருக்காவிட்டால் அரிசி விலை 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை உயர்ந்திருக்கும்.

பயிர் வளர்ப்போம்; நாட்டை கட்டி எழுப்புவோம் திட்டத்தின் கீழ் நெற்பயிர் செய்கை பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. மகிந்த சிந்தனையின் கீழ் கூட்டுறவுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கோப் சிட்டி அமைப்பதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தலா ஒரு மில்லியன் வீதம் ஒதுக்கப்பட்டு இதுவரை 355 கோப் சிட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் ஆயிரம் கோப் சிட்டிகள் ஆரம்பிப்பதற்காக 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையுடன் போட்டியிடக் கூடியவாறு கூட்டுறவுத் துறையை மேம் படுத்த அரசு நடவடிக்கையை எடுத்துள்ளது. உலக சந்தையில் பால் விலை குறைந்தாலும் உள்நாட்டில் பால் விலையை குறைக்க நாம் தயார் இல்லை. உள்நாட்டில் பால் விலையை குறைப்பதன் மூலம் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவார். வெளிநாட்டில் இருந்து பால்மா இறக்கு மதி செய்வதற்கு 3ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்படுகிறது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச–5)

# விசேட கல்விச் செயலமர்வு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 01 ஆசிரியர்களுக்கான விசேட கல்விச் செயலமர்வு தவிக்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாண கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த தரம் 1, தரம் 2 ஆசிரி யர்களுக்கான செயலமர்வுகள் எதிர் வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடை பெறவுள்ளது. (ஓ)

# திறமையான மாகாண சபைகளை உருவாக்கினால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

## கருஜெயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மாகாணசபைகளின் சேவைகள் தொடர்பில் திருப்தி அடையக் கூடியதாக உள்ளது இந்தியாவில் பிரதேச சபைகள் மத்திய அரசுக்கு ஊக்கம் அளிப்பதாகவே



உள்ளன. அதேபோன்றும் எமது நாட்டிலும் மாகாண சபை மற்றும் பிரதேச சபைகள் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும்என அமைச்சரும்ஐ.தே.க.வின் உப தலைவ ருமான கருஜெய சூரிய நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, மேல் மாகாணசபைத் தேர்தலில் களுத்துறை, கொழும்பு ஆகிய பிரதேசங்களில் போட்டியிட திறமையான குழு ஒன்றை நாம் ஒருங்கிணைத்துள்ளோம். எமது தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சுமூகமான நிலையில் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் கட்சியின் குழுவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தேர்தலில் ஈடுபட நீதிபதிகள் சமூக சேவகர்கள், திரைப்பட கலைஞர்கள், அது போன்று சமூகத்தில் வெவ்வேறு துறையில் பிரகாசிப்பவர்களை ஈடுபடுத்தி உள்ளோம்.

உலகில் இன்று தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடி எமது நாட்டையும் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. இது தொடர்பில் கடந்த 4 மாதங்களாக நாம் கூறிக் கொண்டு வருகிறோம்.

இந்நிலையில் தேர்தல்களை ஒரே தடவையில் நடத்தாது ஒவ்வொன்றாக நடத்தும் போது பல பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதால் மக்களின் பணம் பொது சொத்துகள் செலவழிக்கப்படுகின்றன.

இன்றைய பொருளாதார சூழலில் இது பாரிய நெருக்கடிக்கு இட்டு செல்லும். மக்களை பாதிக்கும் இவ்வாறான செயல்களுக்கு உடனடி நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும். திறமையான மாகாணசபைகளை உரு வாக்கினால் எமது நாட்டை கட்டி எழுப்ப முடியும்.

யுத்தம் அற்ற சமாதான நல்லாட்சி உருவாக்குவதே எமது நோக்கம். ஊடக சுதந்திரம் இன்றி ஊடகங்கள் செயற் படுகின்றன.

இதனால் சிறந்த ஊடகவியலாளர்கள் வெளிநாடுகளில் சென்று வசிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. சுதந்திரமாக கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் இல்லாமல் உள்ளது. ஆட்சியில் இருக்கும் அரசுக்கே தேர்தல் கண்காணிப்பு குழு ஒன்றை அமைக்கும் அதிகாரம் உள்ளது எமக்கு இன்று நியாய மான தேர்தல்கண்காணிப்பு குழு ஒன்று அவசியமாகிறது. இன்று சில அரச ஊடகங்கள் ஐ.தே.கவிற்கு எதிராக பல பொய்ப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன இது எமக்கு கவலையை அளிக்கிறது என தெரிவித்தார். (ஓ–6)

# மனித குலத்தின் நன்மையே எனது விருப்பம்–பாபா

துன்பப்பட்டு பகவானையே சரணம் என்றிருப்போரை அவ்வடியான் இருக்கும் இடம்சென்று அவரின் துன்பத்தைப் போக்கியிருப்பதை பாபாவே பல வழிகளில் உணர்த்தியிருக்கிறார். பெங்களூர் விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த இராமகிருஸ்ணன் என்பவர் பகவானைத் தரிசிக்கும் பொருட்டு பிரசாந்தி நிலையம் சென்றார். அன்றிரவு ஒன்பது மணியளவில் ரெலிபோன் அழைப்பு வந்தது. அவரின் தாயாருக்கு மூளையோடு சம்பந்தமான நோயினால் மிகவும் அபாயகரமான நிலையில் ஹைதராபாத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டது.



அவ்வேளை பகவான் ஓய்வு கொள்ளத் தமது அறைக்குச் சென்றிருந்தார். தாயின் சுகயீனத்தை கேள்விப்பட்டு பதை பதைத்த இராமகிருஸ்ணன் ஏதோ ஒரு வழியில் ஒருவர் மூலம் பகவானிடம் விடயத்தைத் தெரிவித்தார். அப்போது பகவான் செய்தியைச் சொன்னவரிடமே சற்று நேரத்துக்கு முன்பாகத்தான் அந்த மருத்துவமனைக்குச் சென்று வந்தேன். அவருடைய தாயார் நலமாக இருக்கிறார். அவரை கவலையில்லாமல் நித்திரை கொள்ளச் சொல் என்றார்.

அதேவேளை ஹைதராபாத் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவரின் தாயார் கண்விழித்து தன்னிலையினைத் தெரிந்து கொள்ள சுற்றிலும்பார்த்த போது, அவரின் கணவர் அருகில் சென்று வெளியூர் சென்றிருக்கும் பிள்ளைகளை உடன் வருமாறு செய்தி அனுப்பவா என்று கேட்டார். வேண்டாம். பாபா சற்று முன் இங்கு வந்திருந்தார். வீபூதி பிரசாதம் தந்தவிட்டு உடல் நிலை விரைவில் குணமடையும் கவலைப்படத் தேவையில்லை என்று கூறினார். ஆகவே அவர்களை அழைக்கத் தேவையில்லை என்றார். அதுபோல இரண்டு நாட்களின் பின்பு அவருக்கு உடல் நிலை முற்றிலும் குணமாகியது.

மனித வரலாற்றிலேயே மிகவும் அபாயகரமான காலமாக இன்றைய காலம் கழிந்து கொண்டிருக்கிறது. இவ் அபாயகரத்தில் இருந்து மனித குலத்தைக் காப்பாற்றும் வல்லமை எல்லாம் வல்ல பகவான் இடமேயிருக்கின்றது. இன்று பொய், களவு, கொலை, வஞ்சம், தன்னலைச் செயல்கள், கடத்தல்கள் என்று இன்னோரன்ன பாதகச் செயல்கள் மலிந்து விட்டன. இருந்தும் ஆன்மீகமும் முற்றும் முழுதாக புதைந்து போய் விடவில்லை. எனவே பாவங்கள் அழிந்து புண்ணியம் மிகுத்தெழ, அன்பையும் தெய்வீக ஆனந்தத்தையும் அளிக்கும் பகவான் பாபாவே சரணம் என அடையும் அடியார்களாக விளங்குவோமாக.

யாதவன்

பகவானே அருளுகின்றார்! சாயி சங்கல்ப்பம் வஜ்ஜிர சங்கல்பம். சாயி முடிவு இடியைப்போன்றது. அதனை யாராலும் தடுக்க முடியாது. நீக்க முடியாது. வெல்ல முடியாதது. உறுதி படைத்தது. நான் எனக்காக ஆசைப்படுவது எதுவு மேயில்லை. நான் முயற்சிசெய்வதும், ஆசைப்படுவதும் மனிதகுலத்தின் நன்மைக்கே என்கின்றார்.

ஜெய் சாயிராம்

# ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவை

## மோதல் பிரதேசங்களுக்கு அழைத்து செல்வது பற்றி ஆராய்வு

### வெளிவிவகார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராகப் போர் குற்றச்சாட்டு முன் வைக்கப்படலாம் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவை மோதல்கள் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிப்பது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவிருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழுவை வடபகுதியில் மோதல் பிரதேசங்களுக்கு அழைத்துச் செல்வது பற்றி ஆராய்வதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரம் கூறுகிறது.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவின் விஜயத்திற்காக திகதி மற்றும் நிகழ்ச்சிநிரல்களை நாம் தயாரித்து வருகிறோம் என்றார். இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கொஹன கூறினார்.

வடபகுதியில் தொடர்ந்துவரும் மோதல்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் மக்களையும் ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் நேரில் சென்று பார்வையிடவிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை இராணுவமும் விடுதலைப் புலிகளும் மேற்கொண்டு வரும் குறிப்பிட்ட சில நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் மனிதாபிமானச் சட்டம் என்பவற்றை மீறும் வகையில் அமைந்துள்ளன. என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டிய தேவை உள்ளது.

ஆனால் நிலைமையானது முற்று முழுதாக கவலையளிப்பது என்பதே போதியளவுக்கு நாம் அறிந்துள்ளோம். இந்த மாதிரியான நடவடிக்கைகள் போர்க்குற்றங்கள் மற்றும் மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் என்பது தொடர்பாக இன்று உலகம் உணர்ந்துள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அறிவித்திருந்தார்.

இதன் பின்னணியிலேயே இலங்கை வரும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவை மோதல்கள் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்க அரசாங்கம் முன்வந்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இந்த மாத ஆரம்பத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற செனட்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் ஆன்னா நெய்ஸ்ரெட் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்குச் சென்று இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்தேன் எனக் கூறியிருந்தார்.

அவர் உரிய அனுமதி பெற்று வவுனியா செல்லவில்லையெனக் கூறியிருந்த இலங்கை அரசாங்கம் இலங்கையின் குடிவரவுச் சட்டத்தை மீறியிருப்பதாகவும் குற்றஞ் சாட்டியிருந்தது.

வவுனியாவுக்கு விஜயம் மேற்கொண்டு வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைச் சந்தித்துத் தான் கலந்துரையாடியிருந்ததாகவும் இடம்பெயர்ந்த மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்திருப்பதாகவும் ஆன்னா கூறியிருந்தார்.

ஆன்னாவின் இலங்கை விஜயம் இலங்கை அரசாங்கத்தைப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்ததுடன் அவரின் விஜயம் பற்றி உடனடி விசாரணைகளை நடத்துவதற்கும் உத்தர விட்டிருந்தது.

அத்துடன் இலங்கை வரும் வெளிநாட்டவர்கள் குறித்து மேலதிக கவனம் செலுத்தப் போவதாகவும் அரசாங்கம் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)

## செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேக தினம்

(மருதங்கேணி)


தொண்டைமானாறு செல்வ சந்நிதி ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேக தினம் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை விசேட பூசைகளுடன் நடைபெறவுள்ளது.

அன்று காலை முருகப் பெருமானுக்கு 1008 சங்குகளால் அபிஷேகம் நடை பெற்று விஷேச பூசைகள் இடம் பெறும்.

வசந்த மண்டப பூசையை தொடர்ந்து முருகப் பெருமான் வீதி உலா வருவார். விஷேட மேளக்கச்சேரி நடைபெறும்.

அத்துடன் அன்று சந்நிதியான் ஆச்சிரமத்திலும் விஷேட பூசைகள் இடம்பெறவுள்ளது.

(ஓ-35)



ஜே/196 கிராம அலுவலராக 12ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்ற செ.வைத்தியநாதனின் மணி விழா கடந்த மாதம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உடுவில் பிரதேச செயலர் பாராட்டுரை வழங்குவதையும் விழா மேடையில் வைத்தியநாதன் தம்பதிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## மண்டலாபிஷேகம்

(இணுவில்)

இணுவில் ஸ்ரீ பரராஜ சேகர பிள்ளையார் திருக்கோவில் மண்டலாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 5.30 முதல் விசேட திரவிய அபிஷேகம் பத்தாயிரம் சங்குகளால் மகாஸ் நபனாபிஷேகம் ஆகியன இடம் பெறும்.

மாலை 6 மணிக்கு சுவாமி வீதிவலம் வருதல் இடம் பெறும். (ஓ)

## இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கு உலக வங்கி நிதியுதவி

(கொழும்பு)

நாட்டின் பெருந்தெருக்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த உலக வங்கி நிதியுதவிகளை வழங்கவுள்ளது.

உலக வங்கியின் சர்வதேச சம்மேளனத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற கலந்துரையாடலொன்றின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்களிற்கென 16 கோடி அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி பெருந்தெருக்கள் அபிவிருத்திக்கு 10 கோடி ரூபாவும் கல்வி நடவடிக்கைகளிற்கென 6 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இது தவிர பிரதான வீதிகளின் 660 கிலோ மீற்றர் பாதை புனரமைப்பிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக உலக வங்கி அறிவித்துள்ளது. (ஓ-14)

## நற்பண்புச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் புண்ணிய கிராம வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் ஒரு நாள் நற்பண்பு செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாதகல் விநாயகர் அறநெறிப்பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராகச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவசிறி மங்களேஸ்வரக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் *ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்* எனும் விடயத்தில் சைவப்புலவர் ஸ்ரீநந்திரனும் *குறிக்கோள் இல்லாமல் கெட்டேன்* எனும் விடயத்தில் சைவப் புலவர் நா.நவராஜும் சைவ வாழ்வு எனும் விடயத்தில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனும் சமூகத்தை வழிப்படுத்தும் இந்துமதம் எனும் விடயத்தில் சைவப்புலவர் நவநீதனும் சிறப்புரையாற்றவுள்ளனர். (6)

## ஈட்டி முனை முழங்காலில் பாய்ந்ததில் மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஈட்டி முனைவு முழங்காலை துளைத்துச் சென்றதில் மாணவன் ஒருவர் படுகாய மடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 8 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது,

வலய மட்டப் போட்டிக்காக மாணவர்கள் ஈட்டி எறிதல் பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை அதனை பார்வையிடச் சென்ற மாணவரான சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த சத்தியராசா பரதன் (வயது14) என்பவரின் முழங்காலில் ஈட்டியின் முனைவு துளைத்ததினால் அவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த மாணவன் உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (6,30)

## ஆபத்து வேளையில் அடைக்கலம் தருபவர் புனித சூசைமுனீந்திரர்

### இன்று கொழும்புத்துறை புனித சூசையப்பர் திருவிழா

கொழும்புத்துறை புனித சூசையப்பர் திருவிழா ஆண்டுதோறும் பங்குனி மாதம் 19ஆம் திகதி சிறப்பாகக்கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆலய வளாகத்தில் சூசை முனிவரின் நாமம் கொண்ட பாடசாலை அந்தக் காலம் தொட்டு இன்று வரை சிறப்பாக இயங்கி வருகிறது.

1960 க்கு முன் ஆசிரிய கலாசாலை சூசையப்பரின் நாமத்தால் அவர்களின் வழிகாட்டலாலும் குருமாருடைய தலைமையில் அநேக கல்விமான்களை உருவாக்கியது.

கல்வி மான்களின் ஆசானாகவும் தொழிலாளருக்கு சிறந்த பாதுகாப்புமாக விளங்கியவர் சூசையப்பர். இவரை கன்னியான தேவ தாய்க்கு கற்புள்ள காவலனாக இறைவன் தேர்ந்துகொண்டார். பாவ உலகில் பாவப் பழுதின்றி ஓர் நீதியுள்ள நடுவராக விளங்கியதால் இறைவன் தன் மகனை வளர்க்கும் பொறுப்பை இவரிடம் கொடுத்தார் விசுவாசத்தின் தந்தை. ஆபிரகாமின் வழிமரபில் யாக்கோப்பின் குலத்தில் பிறந்து பலதரப்பட்ட சோதனைகளில் கலங்கிய போது கடவுள் இவரை திடப்படுத்தினார். கடவுளுடைய வாழ்த்து கபிரியேல் தூதன் மூலம் மரியாளுக்குச் சொல்லப்பட்டது.

பரிசுத்த ஆவியால் இறைவன் மனிதன் ஆனார். சூசையின் சந்தேகத்திற்கு தூதன் மூலம கடவுள் விடை கொடுத்தார். ஜெருசலேம் தேவாலயத்தில் சிமியோன் சொன்னதையும்,மகனைக் காணாமல் அறிஞரோடு கண்டதை மாதாவுக்கு மகன் கூறியதையும் சூசையும் மனதில் பதித்து வைத்திருந்தார்.

33 வயது மதிக்கும் போது திருமணமாகிய சூசையப்பர் 27 ஆண்டு மரியாளோடும் தேவ குமாரனோடும் வாழ்ந்து 60 வயதில் இயேசுவின் மடியில் பாக்கியமான மரணத்தைத் தழுவினார்.

இவருடைய திருத்தலங்கள் எங்கும் பங்குனி மாதம் 19ஆம் திகதி திருவிழா சிறப்புடன் நடைபெற்றாலும் சில சூசையப்பரின் ஆலயங்களில் வைகாசி முதலாம் திகதி தொழிலாளர் தினத்தில் அவருடைய திருவிழாவைக் கொண்டாடுகின்றனர். பொறுமையையும், வறுமையையும் அணிகலமாகக் கொண்டுள்ளவரை திருச்சபைக்கு தூணாகி இருப்பவரை ,பல இறைபணியாளரை உருவாக்கித் தருபவர் சாத்தானின் துர்க்குணங்களை அடக்குபவர். நம்பி வருவோருக்கு நல் வழி காட்டி பர லோக வீட் டின் பாதைகளை காண்பிப்பவர். ஆகவே சூசை முனிவரை வணங்கி அவருடைய வல்லமை உள்ள பரிந்துரையினால் எம் நாட்டின் சாத்தானின் ஆதிக்கம அழிந்து போகவும் எம் நாட்டில் நடைபெறும் கொடிய போர் நீங்கி நீதியான தீர்வும் நிரந்தர அமைதியும் பெற்று எல்லோரும் சுபீட்சமாக வாழ வழி செய்வாராக!



*அருளப்பு கொர்னேலியஸ்*
*கொழும்புத்துறை*

# சரிவிலிருந்த நியூசிலாந்து அணியை சதமடித்து மீட்டனர் விக்டோரி, ரைடர்





(ஹமில்டன்)

அணித்தலைவர் டானியல் விக்டோரி, ரைடரின் சிறப்பான சதத்தின் மூலம் நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 279 ஓட்டங்களை எடுத்து கௌரவமான இலக்கை அடைந்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை எடுத் திருந்தது.

நியூசி லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 இருபது–20, 5 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் இருபது–20 தொடரை நியூசிலாந்து 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியதுடன் ஒருநாள் தொடரை இந்திய அணி 3:1 என்ற கணக்கில் சுவீகரித்தது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று ஹமில்டனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 23.1 ஓவர்களில் 60 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 6 விக்கெட்டுக்களை யிழந்து திணறியது.

இந்நிலையில் 7 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரைடர்– விக்டோரி ஜோடி பொறுப்பாக துடுப்பெடுத்தாடி 186 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்து சரிவிலிருந்து அணியை கௌரவ மான நிலைக்கு தூக்கி நிறுத்தினர்.

இறுதியில் நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 279 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் டானியல் விக்டோரி 164 பந்துகளில் (16 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங் கலாக) 118 ஓட்டங்களை எடுத்து தனது மூன்றா



வது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்ததுடன் ரைடர் 102 ஓட்டங்களையும் எடுத்தார்.

பந்துவீச்சில் இஷாந்த் சர்மா 4 விக்கெட்டுக்களையும் முனாப் பட்டேல் 3 விக்கெட்டுக்களையும் சகீர் கான் 2 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களைஎடுத்திருந்தது.

இதில் சேவாக் 24 ஓட்டங்களையும் காம்பீர் 6 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

# பெண்கள் உலககிண்ணத் தொடர்; நியூசிலாந்திடம் வீழ்ந்தது இந்தியா

(சிட்னி)

பெண்கள் உலக கோப்பை 'சுப்பர் சிக்ஸ்' சுற்றில் தீர்க்கமான ஆட்டத்தில் இந்திய அணி நியூசிலாந்திடம் 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதையடுத்து இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. பெண்களுக்கான 9 ஆவது ஐ.சி.சி உலக கோப்பை கிரிக்கெட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடக்கிறது.

சிட்னியில் நேற்று முன்தினம் நடந்த 'சுப்பர் சிக்ஸ்' சுற்றில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு தேஷ் பாண்டே (8), ராய் (3) ஏமாற்றினர். மிதாலி ராஜ் (21) ஓரளவுக்கு தாக்கு பிடித்தார்.

பின் வந்த ரூமெலிதர் (5) அணித் தலைவி கோஸ் வாமி (4) விரைவில் அரங்கு திரும்பினர். அரைசதம் கடந்த



சோப்ரா (52) மல்கோத்ரா வுடன் இணைந்து சிறப்பான ஆட்டத் தை வெளிப் படுத்தி, அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இறுதி யில் இந்திய அணி 49.4 ஓவரில்சகல விக்கெட்டுக் களையுமிழந்து 207 ஓட்டங்களை எடுத்தது . இதில் மல்கோத்ரா 59 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு புல்போர்ட் சிறப்பான ஆரம்பம் தந்தார். அரைச் சதங்கடந்த புல்போர்ட் 71 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த சார்ட்டர் வெயிட் (12) மெக்கிலாஸன் (11) ஏமாற்றினாலும், பேட்ஸ் (47), பிரவுனே (15) இணைந்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். நியூசிலாந்து அணி 47.4 ஓவரில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 210 ஓட்டங்களை எடுத்து வெற்றிபெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மற்றொரு போட்டியில் முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்கள் எடுத்தது. ஆனால் மேற்கிந்திய தீவுகள் 38.2 ஓவர்களில் 90 ஓட்டங்களுக்கு சகலவிக் கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

# அல்ஷம்மரின் சாதனையை நீக்குவதற்கு ஆலோசனை



இரண்டு நீச்சல்உடைகளை அணிந்து கொண்டு போட்டியில் பங்கேற்ற சுவீடன்வீராங்கனைதெரிஸ்அல்ஷம்மரின் உலக சாதனையை நீக்குவதற்கு போட்டி ஏற்பாட்டு குழுவினர் ஆலோசித்து வருகின்றனர்.

31 வயதான அல்ஷம்மர் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த அவுஸ்திரேலிய தேசிய சாம்பியன்ஷிப் நீச்சல் போட்டியில் பங்கேற்று 50 மீற்றர் பட்டர்பிளை போட்டியில் தனது சொந்த உலக சாதனையை முறியடித்தார்.

இதன் போது அவர் போட்டி தூரத்தை 25.44 வினாடிகளில் முடித்தார். முன்னதாக அவர் 2007 ஆம் ஆண்டில் 25.46 வினாடிகளில் போட்டியை முடித்ததே சாதனையாக இருந்தது. எனினும் அல்ஷமரின் இந்தபுதிய உலக சாதனையை நீக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அவர் இரண்டு நீச்சல் உடைகளை அணிந்துகொண்டே இந்த போட்டியில் பங்குபற்றியுள்ளார். சர்வதேச நீச்சல் ஆணைக்குழுவின் (பினா) புதிய விதியின்படி வீரர் அல்லது. வீராங்கனை ஒருவர் போட்டியின் போது ஒரு நீச்சல் உடையை மாத்திரமே அணிய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் அல்ஷம்மர் இரண்டு நீச்சல் உடைகளை அணிந்து போட்டியில் பங்கேற்றதால் அவரது புதிய உலக சாதனை பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 37





இந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்திய பாகிஸ்தான் அணி இலங்கை அணியை முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதில் முரளிதரன் 50 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 134 ஓட்டங்களைக் கொடுத்து சயிட் அன்வர் (50), அகமெட் ஜீன்ர் (5), வசீம் அக்ரம் (36) மற்றும் வக்கார் யூனுஸ் (0) ஆகியோரை வெளியேற்றி 4 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸ் [illegible] பாலா

பெடுத்தாடிய இலங்கை அணி 186 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதில் முரளிதரன் 8 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்த போதும் ஹசான் திலகரட்ணவுடன் இணைந்து 41 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டார்.

இந்நிலையில் 274 ஓட்டங்களை எடுத்தால் மாத்திரமே இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க முடியுமென இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 233 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து இன்னிங்ஸ் மற்றும் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் முரளிதரன் 3 பந்துகளை மாத்திரமே எதிர்கொண்டு ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்து சோபிக்க தவறினார்.


### பதிலடி கொடுத்தார்

இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் 1995ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் திகதி பைசலாபாத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பை தீர் மானித்தது.


(பயணிக்கும்)

# எண் விளையாட்டு-42



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும்எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்தியஎண்திரும்பவரக் கூடாது.

நேற்யை பகுதிக்கான விடை



## மாலைதீவு...

விரிவாக ஆராயப்பட்டது .வன்னியில் பாது காப்பு படையினர் முன்னெடுத்து வரும் இரா ணுவ நடவடிக்கைகள் மற்றும் படையினர் அடைந்து வரும் வெற்றிகள் தொடர்பாக இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன் சேகா, மாலை தீவு பாதுகாப்பு அமைச்சரிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

புலிகளின் பிடியில் சிக்கியுள்ளஅப்பாவி பொதுமக்களின் நிலைமைகள், அவர்களை பாதுகாப்பாக மீட்டெடுக்க பாதுகாப்பு படையி னர் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் என்பன தொடர்பாகவும் இராணுவத்தளபதி மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் தலைமை யிலான குழுவினரிடம் விளக்கமளித்துள் ளார்.

இதே வேளை மாலைதீவு இராணுவ வீரர் களுக்கு இலங்கை இராணுவத்துடன் இணைந் ததாக சிறப்பாக பயிற்சிகள் வழங்கப்படுவதற் கும் அதற்கான சந்தர்ப்பத்தை இராணுவத் தளபதி வழங்கி வருவதற் காகவும் மாலைதீவு பாதுகாப்பு அமைச்சர் அமீன் பைசல் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார். (ச-5)

## நாடாளு...

உரையை ஊடகங்களில் வெளியிட்டால் குறித்த ஊடகத்திற்கு வழங்கப்பட்டுள்ள நாடா ளுமன்ற செய்தி சேகரிப்பு ரத்துச் செய்ய வேண் டியேற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி சபையின் நடவடிக்கைகள் தொடர்பான வீடி யோ படங்களும் தொலைக்காட்சிகளில் ஒளி பரப்படுவதாகவும் இது குறித்தும் உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டியேற்படும் எனவும் லொக்கு பண்டார எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ-1)

## அரிசியின்...

விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவை தொடர்பில் அமைச்சரவை உபகுழ எடுத்த தீர்மானத்திற் கமைய பெருமளவு அரிசி உற்பத்தி கிடைக் கும் இந்தக் காலப்பகுதியில் அரிசியின் அதிக பட்ச சில்லறை விலையைக் குறைக்க அமைச் சரவை முடிபு செய்ததாக அவர் குறிப்பிட் டார். (ச-3)

# வன்னிப் பகுதி மக்களுக்கு உதவுமாறு ஐ.நா. செயலர் வேண்டுகோள்

(கொழும்பு)

வன்னியிலுள்ள மக்களுக்கு தொடர்ந் தும் உதவுமாறு ஐ.நா. செயலர் பான் கீ மூன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செய லாளர் பான் கீ மூன் நேற்று முன்தினம் மாலை மகிந்த ராஜபக்ஷவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடியுள் ளார்.

இதன்போது வன்னிப் பிராந்தியத்திற் கான மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரி னால் விடுவிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக வும் இடம் பெயர்ந்தோருக்கான தற்காலிக முகாம்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-14)

## முதல்வரை வவுனியாவுக்கு...

அரசாங்கத்தின் நிலைப்பாட்டின் உண்மைத் தன்மையை நிரூபிக்கலாமே என்றும் அவர் கூறினார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மனித உரி மைகளுக்கான நாடாளுமன்ற உறுப்பினர் கள் அமைப்பின் முதலாவது செய்தியாளர் மாநாடு நேற்றுப் புதன்கிழமை கொழும்பில் அமைந்துள்ள நிப்பொன் ஹோட்டலில் நடை பெற்றது. இதில் கருத்துத் தெரிவிக்கையி லேயே மனோகணேசன் எம்.பி.மேற்கண்ட வாறு கூறினார்.

இந்த அமைப்பின் பொதுச் செயலாள ராக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த் தனவும் பொருளாளராக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலியும் செயற்படுகின்றனர்.

அங்கு தொடர்ந்து மனோகணேசன் எம்.பி கருத்துத் தெரிவிக்கையில்,நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அதில் மறுகருத்துக்கு இடமில்லை.

ப்த்திரிகை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் கடத்தப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இதிலிருந்தே சட்டம் மற்றும் ஒழுங்கின் சீர்குலைவு தெரிகிறது. கடத்தல்கள், சட்ட விரோத கைதுகள் என மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

சீருடை இல்லாமல் வெள்ளைவானில் வந்து கடத்திச் செல்கின்றனர். இதற்கு ஆட்சி யிலுள்ளவர்கள் பொறுப்புக்கூற வேண்டும். இந்நிலையில் மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற அமைப்பு ஒன்று உருவாக்கப் படுவது மிகவும் முக்கியமாகும்.

அவ்வாறு உருவாக்கப்படாவிடின் அர்த்த மில்லாமல்போய்விடும். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் குறித்தும் அவ தானம் செலுத்தியுள்ளோம் என்றார். (ச-5)

## 30இற்கும் மேற்...

வந்தவர்களை கடற்படையினர் மீட்டு அவர்க ளுக்குத் தேவையான உணவு மற்றும் மருத் துவ வசதிகளை வழங்கியதாக கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார் .

இதேவேளை, இவர்கள் அனைவரும் நேற்று மாலை பஸ்கள் மூலம் நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளதாக கூறப்பட்டது.

இதேவேளை கட்டுப்பாடற்ற பகுதியிலி ருந்து 98 பேர் யாழ். சுண்டிக்குளம் கடற்பகு திக்கு வந்து சேர்ந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

15 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் நேற்று முன்தினம் காலை 7.45 மணியள வில் சுண்டிக்குளம் பகுதிக்கு வந்து சேர்ந்த னர். இதில் 26 ஆண்களும் 13 பெண் களும் 9 சிறுவர்களும் அடங்கியிருந்ததாக தெரிவிக் கப்படுகிறது.

இதேவேளை மேலும் 17 பேர் இரண்டு படகுகளில் நேற்று 11.30 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படை யினரால் காப்பாற்றப்பட்டு அழைத்து வரப் பட்டுள்ளனர். இதில் 5 ஆண்களும் 6 பெண் களும் 6 சிறுவர்களும் அடங்கியிருந்தனர்.

நேற்றுக்காலை 6.05 மணியளவில் 31 பேர் சுண்டிக்குளம் பகுதியை வந்தடைந்துள் ளனர். இதில் 8ஆண்களும் 7 பெண்களும் 16 சிறுவர்களும் அடங்கியுள்ளனர் என பிரி கேடியர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## வான், எறி...

புதுக்குடியிருப்பு, பச்சைப் புல்மோட்டை, வலைஞர்மடம் ஆகிய பகுதிகளிலுள்ள மக் கள் வாழ்விடங்கள் மீது நேற்று முன்தினம் காலை தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை விமான குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட் டுள்ளது. 30 நிமிடத்திற்கு ஒரு தடவை என மாறி மாறி வந்த விமானங்கள் இடம்பெயர் ந்த மக்கள் வாழ்விடங்கள் மீது குண்டுத் தாக் குதலை நடத்தின.

வான்குண்டுத்தாக்குதல்களில் மட்டும் 52 பேர் உயிரிழந்துள்ளனர். ஏனையோர் எறி கணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ள னர்.இந்த இரண்டு தாக்குதல்களிலும்188 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப் பட்டது. (எ-1)

## ஆயுதங்களை களையா...

ஊடகத்துறை அமைச்சில் நேற்று நடை பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே யே அவர் இதனைக் கூறினார்.அங்கு அவர் மேலும் கூறியதாவது,

புலிகள் ஆயுதங்களை களையாவிட்டா லும் பரவாயில்லை அவர்களை எமது படை யினர் கவனித்துக் கொள்வார்கள். அவர்கள் தடுத்து வைத்துள்ள மக்களை அரச கட்டுப் பாட்டுப் பகுதிக்கு வர இடமளிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

புலிகளிடம் சிக்கியுள்ள மக்களில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நாளாந்தம் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வரு கை தருகின்றனர். வடக்கில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான நடவடிக்கைகள் சிறந்த முறையில் இடம் பெறுவது இதன் மூலம் புலனாகிறது.

ஜனவரி முதல் இதுவரை 45 ஆயிரத்து 519 பேர் விடுவிக்கப்படாத பிரதேசத்திலி ருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வருகை தந்துள்ளனர். நேற்றைய தினம் (செவ்வாய்க்கிழமை) மட்டும் ஆயிரத்து 567 பேர் வந்துள்ளனர்.

அவர்கள் கூறும் கருத்துக்களைக் கேட் டால் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் கஷ் டங்கள் அனைத்தும் அரசாங்கத்தினாலல்ல என்பது நன்கு தெளிவாகின்றது.

மக்கள் பெரும் எண்ணிக்கையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குவர தொடர்ந்தும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் அனைவரையும் எவ்வித பாதிப் பும் ஏற்படாத வகையில் பாதுகாப்பான முறையில் அழைத்து வருவதே அரசாங்கத் தின் முக்கிய நோக்கமாகும்.

ஆயுதங்களை கீழே வைக்குமாறு புலிக ளை அரசு கேட்டுக்கொண்டது. அதேபோன்று உலகநாடுகளும் கேட்டுக்கொண்டன. எனி னும் புலிகள் அதற்கு செவிமடுக்கவில்லை. இருப்பினும் ஆயுதங்களைக் களைந்தால் தீர்வுத்திட்டம் முன்வைப்பதில் கவனம் செலுத் தும் நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ள தென அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(ச-5)

## மேல் மாகாணத்தில்...

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர் பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந் திப்பு நேற்றுக்காலை தேசிய பாதுகாப்புக் கான ஊடக மத்திய நிலையத்தில் நடந்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இங்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் கூறியதாவது, விடுதலைப்புலிகள் தெற்கில் இனமோதல்களை ஏற்படுத்தும் நோக்கில் புதிய தாக்குதல்களை நடத்த திட்டமிட்டுள் ளனர் என புலனாய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி அக்குரஸவில் நடைபெற்ற மீலாத் விழாவின்போது நடத்தப் பட்ட தற்கொலைத் தாக்குதல் பாணியில் மேலும் பல தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

இவ்வாறான தாக்குதல்களை தடுத்து நிறுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு பொலி ஸாருக்குத் தேவை. எனவே பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேல் மாகாணத்தில் குடியேறியவர்களும் எதிர் வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தம் மை பதிவு செய்துகொள்ள வேண்டும்.

மேல்மாகாணத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் மற்றும் வேறு பொது நிலையங்களிலும் இதற்கான சகல ஏற்பாடு களையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## விடுதலைப் புலிகளுடனான...

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் இன்னமும் மூன்று வாரங்களுக்குள் பூர்த்தியடையும் என இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மிகச்சிறிய நிலப்பரப்பிற்குள் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரன் சிக்கியிருக்கிறார்.

பிரபாகரன் தப்பிச் செல்லக் கூடிய சகல வழிகளும் மூடப்பட்டுள்ளதாகவும் குறித்த உயர் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து 400 மீற்றர் தொலைவில் படையினர் நிலை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே வெகுவிரைவில் தமிழீழ விடுத லைப்புலிகளிடமிருந்து பூர ணமாக நிலப்பரப்புக்களை கைப்பற்ற முடியும் என குறித்த உயர் இராணுவ அதி காரி பிரபல ஆங்கில இணைய தளமொன்றுக்கு செவ்வி அளித்துள்ளார்.

இதேவேளை, முல்லைத் தீவில் பொதுமக்களுக்கு பாதிப்புக்கள் இன்றி தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை படைகள் நடத்தி. வருவதாக அனர்த்த நிவா ரண சேவைகள் மற்றும் மனித உரிமைகள் அமைச் சர் மகிந்த சமரசிங்க கூறிய தை கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஏற்க மறுத்துள் ளனர்.

அமெரிக்க,பிரித்தானிய,பிரான்ஸ்,நோர்வே மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கொழும்பில் உள்ள அதிகாரிகள் தரத்திலான இராஜதந்திரிகளை அமைச்சர் மகிந்த சமர சிங்க சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பாக எடுத்துக் கூறினார்.

ஆனால்,போரில் மக்கள் பாதிக்கப்படுவ தாகவும் அத்தியாவசிய மருந்துப் பொருட் கள் எதுவும் அங்கு இல்லை எனவும் இராஜ தந்திரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற சந்திப்பில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடன் ஜனாதிபதி செயலக அதிகாரி கள் சிலரும் கலந்து கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபை,அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் ஆகியனவற்றின் உதவியுடன் போரில் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு அரசாங்கம் நிவாரணங்களை வழங்க வேண்டும் என்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சந்திப்பில் கலந்து கொண்ட இராஜதந்திரிகள் கேட்டு கொண்ட தாக கூறப்படுகின்றது.

இச்சந்திப்பு குறித்து அரசாங்கமோ அல்லது கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களோ ஊடகங்களுக்கு எதுவும் தெரிவிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (ச-5)


சிறுதொழில் செய்ய விரும்புபவர்களுக்கு

ஓர் நற்செய்தி

உழுந்து, ஈர அரிசி அரைக்கும் சிறிய, பெரிய இயந்திரம். நெல் உடைத்து அரிசி பொலிஸ் செய்யும் இயந்திரம், டீசல் எஞ்சின் உதிரிப்பாகங்கள், வட்டவாள், பாட்டுவாள், மோட்டார் எல்லா அளவுகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விஷேடமாக அரிசி, உழுந்து இயந்திரம் 5,10,15 லீற்றர் அளவுகளில் சரித்து அரவையை எடுக்கும் இயந்திரம் இதுவரை யாழ்ப்பாணத்தில் வராதவை.

ஒருமுறை வந்து பார்க்கவும்

சமுத்திரா ரேட் லிமிட்டட்

இல.117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-2204)

மாணவ மணிகளே! நகைச்சுவை ஆர்வலர்களே!

திகில் ஊட்டும் படக்கொமிக்ஸ் கதைப் புத்தகம், தங்கள் அறிவையும் உலக அனுபவங்களையும் அள்ளி வழங்கும் வெஸ்ரன் யோக்ஸ் (தமாஸ்) நிறைந்தவை.



முத்து-லயன் கொமிக்ஸ்

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் எமது காட்சியறைக்கு

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C-2203)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.